கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

-4-
அண

பரிசுப் பாக்கெட்டுகள்!

உங்கள் சிநேகிதர், தம்பி தங்கைகளின் பிறந்த நாள், விசேஷ நாள் பரிசாக நீங்கள் வழங்கக்கூடிய ஒப்பற்ற பரிசு!

★

கண்ணன் வெளியீடுகள்

1. சின்ன ராஜா
2. ஜக்கு
3. ராஜாவும் குருவியும்
4. கழுகும் கிளியும்
5. தவளையும் காளையும்
6. தங்கத்தின் பந்து
7. கோழி விதைத்த நெல்
8. என் பேர் என்ன?
9. குளிகைத் தீவு

இந்த 9 புத்தகங்கள் அடங்கிய அழகிய பரிசுப் பாக்கெட்டுகள். ஸெலபோன் காகிதம் சுற்றியது. டைம் - டேபிளுடன் கூடியது.

பரிசுப் பாக்கெட்டுகள்

விலை ரூ. 2/8

★

தனித் தனியாக வாங்கினால் மொத்தம் ரூ. 3-9-0 ஆகிறது.

பிப்ரவரி முடியத்தான் இந்தப் பரிசுப் பாக்கெட்டுகள் விற்பனை ஆகும். சென்னை, கண்காட்சியிலும் ஏராளமான செட்டுகள் விற்பனையாகின்றன.

மானேஜர் :: கண்ணன் :: சென்னை - 4

பொருளடக்கம்

மலர்: 4 இதழ்: 2

பிப்ரவரி '53

குழந்தைகளே !	பக்கம் ..	2
வாழ்க கிரிக்கெட் நாமம் - மகரம்	.. ..	3
சூரியன் - பெ. நா. அப்புஸ்வாமி, மாணிக்கம்		8
ஐஸ் புருட் வழக்கு - திருச்சி அண்ணு	..	13
முத்து வறுவல் - கே. சுந்தரேசன்	.. ..	19
காபி எங்கே? - பி.எஸ். பாலன்	.. ..	21
அவர்தான் சாமி - 'ஜோதிமாமா'	.. ..	25
காசி யாத்திரை - கே.எஸ்.பி.	.. ..	26
அபாயச் சங்கு - 'நீலம்'	.. ..	30
கண்ணன் கழக அங்கத்தினர்கள்	.. ..	35
என் ஹாஸ்யம் - தெனுலிராமன்	.. ..	37
புலிக்குட்டி - 'அமா'	.. ..	42
மீன் விளையாட்டு - பி.என். குமார்	.. ..	48
நாமொன்று நினைக்க - ராஜா	.. ..	49
கேட்டீர்களா !	.. ..	52
கண்ணன் தபால்	.. ..	53

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், மஞ்சரி, கண்ணன்

குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும பெயரகள் யாவும கறபனைப பெயர்களே.

குழந்தைகளே!

பொங்கல் வாழ்த்துக்களும் குடியரசு தின வாழ்த்துக்களும் என் மேஜைமேல் குவிந்து கிடக்கின்றன. முடிந்த வரையில் நானும் பதில் எழுதிப் பார்த்தேன். அடுத்த பொங்கல் வரையில் பதில் எழுதவேண்டியிருக்கும் போலிருந்தது. அதனால் நிறுத்திவிட்டேன். அந்தப் பதில் வாழ்த்துக்களையெல்லாம் எழுதின வர்கள் எழுதாதவர்கள் எல்லாருக்குமாகச் சேர்த்து இங்கே தெரிவித் துக்கொள்கிறேன். மங்களப் பொங்கலன்று உங்கள் இல்லங்களில் பால் பொங்கியது போல என்றென்றும் உங்கள் மனத்திலும் மகிழ்ச்சி பொங்கவேண்டும் என்று மனமார வாழ்த்துகிறேன்.

இந்த இதழில் புதிய தொடர்கதை ஆரம்பிப்பதாக இருந்தோம். ஆனால் பல குழந்தைகள் எப்போது ஆரம்பம் என்பது தெரியாமல் கடிதம் எழுதியிருக்கிறார்கள். எனவே அதுபற்றிய விளம்பரம் இந்த இதழில் வெளியாகியிருக்கிறது. எல்லாருக்கும் முதல் இதழிலிருந்தே கிடைக்க வேண்டுமல்லவா? இந்த விளம்பரத்தைக் கண்டவுடனே நீங்கள் உங்கள் ஊர் ஏஜெண்டிடமோ அல்லது நேரில் எங்களுக்கோ தெரிவித்துவிடுங்கள்.

புதிய தொடர்கதையின் பெயர் கொஞ்சம் வேடிக்கையானது. ஏனென்றால் அதில் வரும் கதாநாயகனான அசட்டுப் பிச்சு ரொம்ப வேடிக்கையான பிரகிருதி. அசடுமாதிரி இருந்துகொண்டே பல மர் மங்களைக் கண்டு பிடித்துவிடுகிறான். அசாத்தியமான காரியங்களை யெல்லாம் அநாயாசமாகச் செய்துவிடுகிறான் சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டே பொல்லாதவர்களையெல்லாம் சிரிப்பாய்ச் சிரிக்கும்படி செய்கிறான். அவனுடைய அசட்டுத்தனத்தினாலேயே எல்லாம் தானாக வெளிப்பட்டு விடுகின்றன. திருடர்களும் மோசக்காரர்களும் அவன் பெயரைக் கேட்டாலே நடுங்குகிறார்கள். ஆனால் நம்மால் அவன் பெயரை மறக்கவே முடியாது அவன் பெயர் நம் மனத்தில் பசுமையாகப் பதிந்துவிடுகிறது. நாம் அவனுடைய சாகஸச் செயல்களைக் கண்டு பிரமிக்கிறோம். அவன் வெற்றியைக் கண்டு மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப்படுகிறோம்; ஆனந்தப் பரவசமாகிறோம். விறுவிறுப்பான சம்பாஷணைகளும் திகைப்பை ஏற்படுத்தும் சம்பவங்களும் நிறைந்த இந்த அற்புதமான தொடர்கதையை ஆர்வி எழுதுகிறார். முன்பு ஆர்வி எழுதிய 'ஜக்கு'வைப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் பாராட்டினார்கள். அசட்டுப் பிச்சுவை அநேகமாயிரம் குழந்தைகள் பாராட்டப் போகிறார்கள் என்பது நிச்சயம்.

குழந்தைகளுக்கான ஒன்பது கண்ணன் வெளியீடுகள் அடங்கிய ஸெட்டைப்பற்றிச் சென்ற இதழில் விளம்பரம் செய் திருந்தோம். நூற்றுக்கணக்கான ஸெட்டுகள் விற்பனை ஆயின. மேலும் சில குழந்தைகளும் பெற்றோர்களுங்கூட அந்த மலிவு விலைப் பாக்கெட்டுகளை உடனே வாங்க முடியவில்லை என்று எழுதியிருக் கிறார்கள் அந்தத் தேதியை இன்னும் கொஞ்ச நாள் தள்ளிப் போட்டால் வாங்கச் சௌகரியமாக இருக்கும் என்றும் தெரிவித்திருக் கிறார்கள். அதன்படி மேலும் ஒரு மாதத்துக்கு இந்தச் சலுகையைக் காட்ட முடிவு செய்துவிட்டோம். பிப்ரவரிமாதம் முடிய இந்தப்பரிசுப் பாக்கெட்டுகளுக்குத் தாராளமாக எழுதுங்கள். ஜய் ஹிந்த்!

— ஆசிரியர்.

வாழ்க கிரிக்கெட் நாமம்

மகரம்

உங்களுக்குப் பிடித்தமான விஷயம் எதைப்பற்றி யாவது ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்றதும் எனக்கு முதன்முதலில் இந்தக்கிரிக்கெட் விளையாட்டுத்தான் ஞாபகம் வந்தது. கிரிக்கெட் ஆட்டம்என்றால் உங்களுக்கு ஒரே பைத்தியம் என்பது எனக்குத் தெரியும்!

'பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பது இல்லை' என்று ஆங்கிலேயர்கள் எழுதி வைத்திருப்பதை நீங்கள் சரித்திர புஸ்தகங்களில் படித்திருக்கலாம். (இப்பொழுது பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே அஸ்தமித்து விடும் நிலை வந்துவிட்டது!) ஆனால் பிரிட்டிஷாரின் தேசிய விளையாட்டான கிரிக்கெட்டின் சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதே இல்லை எனலாம். இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, ஆஸ்திரேலியா, நியூ ஜீலந்து மேற்கிந்தியத் தீவுகள் இங்கெல்லாம் இந்த விளையாட்டை வருஷம் முழுவதும் ஆடுகிறார்கள்.

எனக்குத் தெரிந்த மாணவர்கள் சிலர் இருக்கிறார்கள். இவர்களுடைய காலேஜிலோ பள்ளிக்கூடத்திலோ 'டெஸ்ட்' வைத்திருந்தால் காலை மணி எட்டானாலும் படுக்கையை விட்டு எழாமல் தூங்கிவிழுவார்கள். ஆனால், ஆஸ்திரேலியாவில் 'கிரிக்கெட் டெஸ்ட் மாட்ச்' என்றால், போதும்; காலை ஆறரை மணிக்கே எழுந்து, ரேடியோவின் அருகில் காதைத் தீட்டிக் கொண்டு காமென்டரி கேட்க உட்கார்ந்துவிடுவார்கள். (ஆஸ்திரேலியாவில் காலை 11 மணி என்றால் நம்நாட்டில் காலை 6·30 மணி என்று சொல்லிக் கொடுத்த பூகோள வாத்தியாரை இவர்கள் வாழ்த்துவார்கள்.) இதே மாதிரி இங்கிலாந்தில் நடக்கும் டெஸ்ட் மாட்ச் முடியும்போது நம் நாட்டில் இரவு 11 மணியானாலும் இவர்கள் கண்விழிக்கத் தயங்குவதில்லை! "கிரிக்கெட்டே காதாயினார் மெய் வருத்தம் பாரார், இரவு நோக்கார், கண் துஞ்சார்" என்பது தான் இவர்கள் நிலை!

கிரிக்கெட் உற்சாகம் கொண்டவர்களுக்கே கற்பனை அதிகம். இந்த உலகம் முழுவதையுமே இவர்கள் 'கிரிக்கெட் கண்' கொண்டு நோக்குவார்கள்! ராமாயணத்தை எடுத்துக் கொண்டு இவர்கள் அதைக் கிரிக்கெட் கண்ணுடன் ஆராய்வார்கள். ராமாயணம் என்பது, ராமர் (காப்டன்),

சுக்கிரீவன் (வைஸ் காப்டன்), லக்ஷ்மணன், தசரதர், சுமந்திரர், ஸீதை, அநுமார், பரதன், குகன், விபீஷணன், வசிஷ்டர் ஆகியோர் அடங்கிய கோஷ்டிக்கும்—ராவணன் (காப்டன்), கும்பகர்ணன் (வைஸ் காப்டன்) இந்திரஜித், கைகேயி, கூனி, மாரீசன், சூர்ப்பணகை, விராதன், கரன், மகோதரன், வாலி ஆகியோர் அடங்கிய கோஷ்டிக்கும் நடக்கும் கிரிக்கெட் டெஸ்ட் மாட்ச் என்பது இவர்களுடைய தீர்மானம்! 'ராமர் வீசிய பந்தை ராவணன் அடிக்கும்போது, அந்தப் பந்தை விபீஷணன் பிடித்து விட்டதால் ராவணன் 'அவுட்' ஆகிவிட்டான்'' என்பது இவர்களுடைய கட்சி! இதே மாதிரி, ''தசரதரானவர், கைகேயி வீசின பந்தைக் கூனியினிடம் 'காட்ச்' கொடுத்து விட்டு ஆட்டத்தை (உயிரை) இழந்தார்'' என்பது இவர்களுடைய வியாக்யானம்!

சமீபத்தில் சினிமா நட்சத்திரங்கள் கிரிக்கெட் ஆடினார்களே, பார்த்தீர்களா? சில நடிக நடிகைகள் 'க்ளீன் போல்ட்' ஆனபிறகும் மறுபடி 'பாட்' பிடித்து ஆட அநுமதிக்கப்பட்டார்கள். அதே மாதிரி எலெக்ஷன் முடிவுகளாகிய பந்தினுல் தங்கள் மந்திரிப் பதவி சாய்க்கப்பட்ட மந்திரிகள் மீண்டும் சில காலத்துக்குத் தொடர்ந்து ஆட அதாவது பதவி வகிக்க அநுமதிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். விளையாட்டுக்களில் இருக்கும் விட்டுக் கொடுக்கும் மனோ பாவம் மற்றத் துறைகளிலும் வேண்டியது மிகவும் அவசியம்.

கிரிக்கெட் ஆடுவோரை விட அதைப் பார்ப்போருக்கே சிரமம் அதிகம். ஆபீஸ் வேளையில் சுமார் அரைமணி நேரம் பஸ் ஸ்டாண்டில் க்யூவில் நிற்பதற்குள் பஸ் அதிகாரிகளுடைய மண்டையைப் போட்டு உருட்டுகிறவர்கள் கிரிக்கெட் மாட்சுக்கு டிக்கெட் வாங்க விடியற்காலை 5-30 மணி முதல் காலை 9-30 மணி வரையில் காபிகூடச் சாப்பிடாமல் க்யூவில் நிற்கத் தயங்குவதில்லை. இதுதான் கிரிக்கெட் மகாத்மியம்!

காலை பத்து மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரையில் இவர்கள் பட்டப் பகலில் வெட்டவெளியில் தலையில் துண்டைப் போட்டுக்கொண்டு ஆட்டம் பார்க்கிற வைபவத்தைப் பார்க்க ஆயிரம் கண்கள் படைத்திருக்கவேண்டும். கிராமாந்திரங்களில் தேர் திருவிழாவுக்குப் போகிறவர்கள் கட்டுச் சாதத்துடன் கிளம்புவதுபோல கிரிக்கெட் விழாவுக்குக் கிளம்புகிறவர்கள் வேறு சில உபகரணங்களுடன் புறப்படுகிறார்கள். தெர்மாஸ் பிளாஸ்க் நிறைய காபி, புளியோதரை, இட்லி, தயிர்சாதம், வேர்க்கடலை ஒரு படி, ஒரு டஜன் கமலாப் பழம், வாழைப்பழம் ஒரு சீப்பு இவ்வளவும் இருக்கும். சிலர் 'ஹாட்' அணிந்துவருவது வெயிலுக்குப் பயந்து அல்ல; இந்தப் பழத்தோல்களை வீசப்போகிறார்களே என்று பயந்தேதான்.

பைனுகுலரைச் சில பிரகிருதிகள் கொண்டுவந்து

விட்டு அதைப் பக்கத்திலுள்ள வர்களுக்குக் கடன் கொடுப் பார்கள். அது அப்படியே கை மாறி காலரியின் மறுகோடிக் குப் போய்விடும். அது இருக் கும் இடத்தைக் கண்டுபிடித்துப் பார்ப்பதற்கே இன்னொரு பைனு குலர் தேவையாயிருக்கும்!

மற்றப் பொழுது போக்கு களைப் பார்ப்பதற்கும் கிரிக் கெட்டைப் பார்ப்பதற்கும் அதிக வித்தியாசம் உண்டு. கிரிக்கெட் பலவித அபிப்பிரா யங்களை வளர்க்கும் ஜன நாயக விளையாட்டு. ஒரு குறிப்பிட்ட ஆட்டக்காரர் அவுட்டா இல்லையா? அவுட் ஆனுல் எப்படி, ஏன் அவுட் என்பதைப்பற்றி அபிப்பிராய பேதமில்லாமல்போவதே கிடை யாது. ராத்திரியெல்லாம் ராமா யணம் கேட்டுவிட்டு லக்ஷ் மணனுக்கு ஊர்மிளை என்ன உறவு என்றது போலப் பக லெல்லாம் கிரிக்கெட்டைப் பார்த்துவிட்டு, "ஹஸாரே எப் படி அவுட் ஆனுர்? போல்டா? ஹிட்விக்கெட்டா?ஸ்டம்ப்டா? காட் பிகைண்டு தி விக் கெட்டா?" என்று விவாதிப் பார்கள். கடைசியில் "எல் லாம் இன்று இரவு வெளிவரும் பத்திரிகைகளைப் பார்த்துவிட் டால் போகிறது" என்ற முடி வுக்கு வருவார்கள்!

கிரிக்கெட் ஆட்டக்காரர் களுக்குள்ள மதிப்பு நம்முடைய தலைவர்கள், விஞ்ஞானிகள், கவி ஞர்கள், ஞானிகள், இவர்களுக் குக் கிடையவே கிடையாது எனலாம். இந்தக் கிரிக்கெட் காரர்கள் ஒரு டெஸ்ட் மாட் சில் ஒரு நூறு ஓட்டங்களை யாவது அல்லது ஐந்து விக் கெட்டுகளையாவது எடுத்துவிட் டால் அவர்களுடைய படங்கள் பல கோணங்களில் பத்திரிகை களில் வரத் தவருது. பிராட் மன் போன்றவர்கள் ஒரு ரன் கூட எடுக்காமல் (முட்டை வாங்கினுலும்) 'பிராட்மன் முட்டை வாங்கினுர்' என்று கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளிவரும்! யானை இருந்தாலும் இறந்தாலும் ஆயிரம் பொன்!



காலை 5-30 மணியிலிழிந்து கியூவில் நின்று....



கிரிக்கெட் விமரிசகர்களுடைய எழுத்துச் சக்தி மிகவும் பிரபலமானது. அட்சரலட்சமாவது கொடுத்து அவர்களைத் தங்கள் பத்திரிகைக்கு எழுத வைக்க வேண்டுமென்று துடியாய்த் துடிக்கும் பத்திரிகையாசிரியர்கள் பலர் உண்டு. இந்த விமரிசகர்கள் பலர் மாஜி கிரிக்கெட் வீரர்களாக இருப்பார்கள். இவர்களில் சிலர் அம்பயர்களாகவும் உருவெடுத்து விடுகிறார்கள்! (இடது கை பாட்டாளி, அதாவது 'பாட்ஸ்மான்' இடது கை 'போலர்' என்றெல்லாம் நாம் கேள்விப்படுவதுபோல இடது கையைத் தூக்கும் அம்பயர்கள் இருக்கிறார்களா என்ற விவரம் எனக்குத் தெரியாது.) 'விரல் இல்லாதவர்களுக்குக் குரல்' என்பது போல ரேடியோவில் கிரிக்கெட் விமரிசகர்களாக மாறிவிடுவதும் உண்டு. ஆட்டக்காரர்களில் ஆல் ரவுண்டர்கள் இருப்பதுபோல மாஜி ஆட்டக்காரர்களில் அம்பயர், விமரிசகர்களான ஆல்ரவுண்டர்களும் இருப்பதுண்டு.

இந்த விமரிசகர்களிடையே நிலவும் அபிப்பிராய பேதங்களுக்கு இணையே கிடையாது. ஆட்டத்தின் முதல்நாள் ஒரு கட்சி 200 ஓட்டங்களே எடுத்திருக்கும். அதை ஆமையைப் போன்ற ஆட்டம் என்று கண்டிப்பார்கள். மறுநாள் மொத்த ஓட்டம் 175 ஆக இருந்தாலும் அதை, 'மகத்தான சாதனை' என்பார்கள். "இன்று ஆடினவர்கள் போர் (Four) அடிக்காவிட்டாலும் போர் (Bore) அடிக்கவில்லை" என்பார்கள்!

சங்கீத ரஸிகர்களில் சில பழைமை விரும்பிகள் இருப்பார்கள். இவர்களுக்கு மகா வைத்தியநாதய்யர், புஷ்பவனம், மாமுண்டியாபிள்ளை இவர்களுடைய கச்சேரிகள்தான் பிடிக்கும். "இப்பொழுதெல்லாம் பாடுகிறார்களே இது சங்கீதமா, ஸார்!" என்பார்கள். இந்தமாதிரி கிரிக்கெட்டிலும் சில பழமை ரஸிகர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு, மாரீஸ்டேட், ஸ்போபார்த், ரஞ்சித்சிங் இவர்களுடைய ஆட்டம்தான் பிடிக்கும். அவர்களுடைய ஆட்டத்தை இவர்கள் நேரில் கண்டு ரஸித்தவர்களோ என்றால் அது

வும் கிடையாது. எல்லாம் புஸ்தகத்தில் படித்த ஏட்டுச் சுரைக்காய்தான்!

போலீஸ்காரர்கள் சமீப காலத்தில் கிரிக்கெட் மைதானங்களில் செய்து வரும் தொண்டைக் குறிப்பிடாமல் இருக்க முடியுமா? இரவு நேரங்களில் லைட் இல்லாமல் சைகிள் விடுவது, நடைபாதையை விட்டு நடுரோட்டில் நடப்பது பஸ் நிரம்பின பிறகு ஓடும் பஸ்ஸில் ஏறிக் கொண்டு, அதை ஓவர் லோடாக்குவது போன்ற சட்ட விரோதமான காரியங்கள் செய்பவர்கள் இவர்கள் தான். கிரிக்கெட் மைதானத்தில் வைத்திருக்கும் ஸ்கிரீனுக்கு முன்னால் ஆட்ட நடுவில் அடிக்கடி 'பீட்' நடை பழகி, கிரிக்கெட் ஆட்ட சட்டத்துக்கும் தாங்கள் புறம்பானவர்கள் என்பதை நிரூபித்து வந்திருக்கிறார்கள். வாழ்க, அவர்கள் கொற்றம்!

போலீஸ்காரர்களுக்கு அடுத்தபடியாக இந்தப் பழவியாபாரிகளைச் சொல்லவேண்டும். ஒரு குறிப்பிட்ட 'பாட்'டாளி அவுட் ஆகும் சமயம் பார்த்து அவருக்கும் உங்களுக்கும் இடையில் கூடையுடன் வந்து மறைக்கும் ஆற்றல் இவர்களுக்கு மிக அதிகம்.

சினிமாப் பத்திரிகைகளில், "அந்த நடிகைக்கு என்ன வயது? அவள் ஊர் எது? சொந்தப் பெயர் என்ன? சந்திரஹாசினி என்ற பிரபல நட்சத்திரத்தின் சொந்தப் பெயர் முனியம்மாளா?" என்றெல்லாம் கேள்விகள் கேட்கப்படுவது போல் சில பத்திரிகைகளில் கிரிக்கெட் நட்சத்திரங்களைப் பற்றியும் கிரிக்கெட்டைப் பற்றியும் கேள்விகள் கேட்கப்படுவதுண்டு. "பத்தே நிமிஷத்தில் ஸெஞ்சரி போட்டவர்கள் உண்டா? ஒரு ரன் கூடக் கொடுக்காமல் பத்து விக்கட்டுகளையும் வீழ்த்தியவர் உண்டா? ஒரு ஆட்டக்காரர் சொந்த ஊரில் நடந்த மாட்சில் கடைசி இரண்டு பந்துகளில் இரண்டு விக்கெட்டுகளை எடுத்துவிட்டு, வேறொரு நாட்டுக்கு வந்தவுடன் முதல் பந்தில் ஒரு விக்கெட்டை எடுத்தால் அவர் ஹாட்டிரிக் செய்தவர் ஆவாரா?" என்பவை போன்ற கேள்விகள் அதிகம்,

ஆகவே, வாழ்க கிரிக்கெட் நாமம்! (அதாவது நாமம் போன்ற மூன்று ஸ்டம்புகள்!) வாழ்க கிரிக்கெட் ரசிகர்களான நீங்கள்!



சூரியன்

ஒரு நாள் கண்ணனும் ராதாவும் புரொபஸர் விஞ்ஞானத்தின் சோதனைச் சாலைக்கு வந்தார்கள். அவர் முக மலர்ச்சியோடு, "வாருங்கள், உங்களைப் பார்த்தால், நீங்கள் எங்கேயோ யாத்திரைக்குப் புறப்பட்டிருப்பது போல் தோன்றுகிறதே" என்றார். உடனே ராதா, "ஆம், சூரிய மண்டலத்துக்கு" என்றாள். "உங்களோடு கூட" என்றான் கண்ணன்.

"நல்ல காரியம். முதலாவது, அங்கே போகமுடியாது. இரண்டாவது, போனால் திரும்ப முடியாது" என்றார் விஞ்ஞானம்.

"ஏன்? ராக்கெட் விமானத்தில் போக முடியாதா?" என்றான் கண்ணன்.

"மணிக்கு அறுநூறு மைல் வீதம் போகக்கூடிய ஆகாய விமானத்தில் ஏறிப் போனாலும் சூரியனைப் போய்ச் சேரச் சுமார் பதினெட்டு வருஷம் ஆகும்."

"என்ன! நிஜமாகவா?" என்றார்கள் இருவரும்.

"ஆம். நிஜமாகத்தான் சூரியன் இங்கிருந்து உள்ள தூரம் ஒன்பது கோடியே முப்பது லக்ஷம் மைல். அது நமக்குச் சிறிய தட்டைப் போல் தோன்றுகிறது. ஆனால் உண்மையில், அது உருண்டை வடிவமானது. அதன் குறுக்களவு சுமார் எட்டு லக்ஷத்து அறுபத்தையாயிரம் மைல். சூரியனைப் பத்துலக்ஷம் சமபாகங்களாக வெட்டினால், ஒவ்வொரு பாகமும் நமது பூமியை விட அளவில் பெரிதாக இருக்கும்."

"அப்பாடா!"

"ஆனால், அந்தத் துண்டு பூமியைப்போல் அவ்வளவு கனமாக இராது."

"அது ஏன், ஸார்?" என்றாள் ராதா.

எழுதியவர்கள்:
பெ. நா. அப்புஸ்வாமி.
ஜே. பி. மாணிக்கம்.

"நமது பூமி ஆறிவிட்டது. அதில் திரவப் பொருளும் கனப் பொருளும் இருக்கின்றன. சூரியன் முழுவதும் வாயுக்களாலேயே அமைந்தது, அது பூமியைப் போல் அவ்வளவு அழுத்தம் இல்லை. ஆனாலும், சூரியன் பூமியைப்போல் மூன்று லக்ஷம் மடங்கு கனமானது."

"சாதாரணமாக வாயுக்களை நாம் பார்க்க முடியாதே. சூரியன் நமக்குத் தெரிகிறதே" என்றான் கண்ணன்.

"அங்குள்ள வாயுக்கள் எல்லாம் மிக மிக உஷ்ணமான நிலையில் இருக்கின்றன. அவை அந்த வெப்பத்தினால் ஜொலித்துக்கொண் டிருக்கின்றன. சூரியனுடைய வெப்பம் விளிம்போரத்தில் சுமார் பதினாயிரம் டிகிரியிருக்கிறது. சூரியன் ஓய்வு ஒழிவு இல்லாமல் இரவும் பகலும், நாலு பக்கமும் அளவு கடந்த வெப்பத்தையும் ஒளியையும் வீசிக்கொண்டே இருக்கிறது. மேலும், கணக்கில்லாத வருஷங்களாக இப்படிச் செய்து கொண்டும் வந்திருக்கிறது.



ஜோதி வளையம் (கரோனா)

"சூரியன் வீசும் வெப்பத்தில் இருநூறு கோடியில் ஒரு பங்கு தான் நமது பூமியில் உறைக்கிறது. அத்தனை சிறு பகுதியால் நமது பூமியில் எத்தனையோ வகையான உயிர்கள் தோன்றி, வளர்ந்து, இயங்கி, அழகாக வாழ்கின்றன. நம்மிடமிருந்து சூரியன் இருக்கும் தூரம் நம் வாழ்வுக்கு ஏற்றதாக இருக்கிறது. சூரியன் சற்றே எட்டிப் போய், பூமியின்மீது உறைக்கும் சூரிய வெப்பம் பத்தில் ஒரு பங்கு குறைந்தாலும், பூமியில் எங்கும் பனி மூடிவிடும்; மரம் செடிகள் பலவும், மிருகங்கள் பெரும்பாலும் அழிந்துபோகும். சூரியன் சற்றே நெருங்கிவந்து, சூரியவெப்பம் அதிகமாக உறைத்தாலோ மரம் செடிகள் எல்லாம் கருகிவிடும்; சமுத்திரங்கள் வற்றிப்போகும். எல்லா உயிர்களும் அழிந்துவிடும்."

"ஓகோ! அதனால்தான் போனாலும் திரும்பிவர முடியாது என்றீர்களோ? அப்படியானால், நேரில் போக வேண்டாம். உங்கள் ஞான ரதத்தில் எங்களை ஏற்றி, எங்களுக்குச் சூரியனிலுள்ள அற்புதங்களைக் காட்டுங்கள்" என்றாள் ராதா.

2

சூரியனிலுள்ள மறுக்கள்

"முதலாவதாகப் பார்க்க வேண்டியது சூரியனைச் சுற்றியுள்ள ஜோதி வளையம். இதற்குக் கரோனு (corona) என்று பெயர். சாதாரண நாட்களில் இது நமக்குத் தெரியாது. பூரண சூரிய கிரகணத்தின்போது இது நன்ருகத் தெரியும். இதோ இந்தப் படத்தைப் பாருங்கள். இந்த வட்டம் சூரியன் இருக்க வேண்டிய இடம். சூரியனைப் பூரண கிரகணத்தின்போது மறைக்கும் சந்திரனே அப்படித் தெரிகிறது. அப்போது சூரியனின் காந்தி நமது கண்ணைக் கூசச் செய்வதில்லை. ஆகையால், அதிலிருந்து வெளியே வீசும் ஜோதி நமக்கு நன்ருகத் தெரிகிறது.

"இந்தப் படத்தை நன்ருகக் கவனித்தால், கறுப்பு வட்டத்திற்கு அடுத்தாற்போல் பிசிர் போன்ற சிர்புகள் வெள்ளையாகத் தோன்றுவது தெரியும். இவை சூரியனிலிருந்து வீசும் ஜ்வாலைகள். இவைகளையும் பார்க்கவேண்டும்.

"மேலும் சூரியனிலும் சில மறுக்கள் அல்லது களங்கங்கள் இருக்கின்றன. ஜோதியே வடிவமாகிய சூரிய பிம்பத்தில் களங்கம் இருக்கும் என்று யார் நினைக்கக்கூடும்' சுமார் 350 வருஷங்களுக்கு முன் இத்தாலியில் வாழ்ந்த கலிலியோ என்பவர் தான் அவைகளை முதன் முதலாகக் கண்டு பிடித்துச் சொன்னுர். அவர் சொல்லியதை ஒருவரும் அப்போது நம்பவில்லை."

"சூரியனிலுள்ள பெரிய களங்கங்களை நாம் வெறும் கண்ணுலேயே பார்க்கமுடியும், ஆனுல், நேரில் சூரியனைப் பார்க்கும்போது கறுப்புக் கண்ணுடியையோ புகைக் கண்ணுடியையோ போட்டுக் கொண்டு தான் பார்க்கவேண்டும். இல்லாவிட்டால் கண் குருடாகிவிடும்.

"இந்தக் களங்கங்கள் சூரியனில் ஓரிடத்தில் தோன்றுகின்றன. நாளுக்கு நாள் அதன் விளிம்பின் ஓரத்தை அடைகின்றன. பின்பு மறைகின்றன. சில நாட்கள் கழித்துச் சூரிய பிம்பத்தின் எதிர்ப்புறத்தில் தோன்றுகின்றன."

"ஏன் ஸார்?"

"நமது பூமி பம்பரம் போல் சுழல்கிறது அல்லவா? அது போலவே, சூரியனும் மேற்கே

நெருப்புச் சுழிகளும் காந்தக் கதிர்களும்

யிருந்து கிழக்குமுக மாகச் சுழல்கிறது.''

''என்ன? அதுவும் ஒரு நாளில் பூமியைப் போல் தன்னைத் தானே சுற்றிக் கொள்ளுகிறதா?'' என்றாள் ராதா.

''இல்லை, சூரியன் பூமியை விட அதிக வேகமாகச் சுழல்கிறது. ஆனாலும், ஒரு தரம் அது தன்னைத் தானே சுற்றிக் கொள்ள ஏறக் குறைய 25 நாள் ஆகிறது.''

''தெரிந்தது, சூரியன் அவ்வளவு பெரிது, அதனால் தான்'' என்றான் கண்ணன்.

''ஆம். இனி கிட்டப் போய்ப் பார்ப்போமா? என்னோடு ஞானரதத்தில் ஏறுங்கள். மனக்கண்ணால் பாருங்கள். நான் சொல்லுகிறேன்'' என்றார்.

''இதோ பாருங்கள் சூரியனைச் சுற்றியுள்ள ஜோதியை! சூரியனுக்கு வெளியே எத்தனை லக்ஷம் மைலுக்கு அப்பால் இந்த ஜோதி வீசுகிறது, பாருங்கள்! இந்த ஒளி வளையம் சில இடங்களில் அகலமாயும் சில இடங்களில் சற்றே அகலக் குறைவாயும் இருக்கிறது. இதற்குக் கரோனா (corona) அல்லது கிரீடம் என்று பெயர்.

''இதைத் தாண்டி உள்ளே செல்வோம். இதோ பாருங்கள், சூரியனிலிருந்து வீசும் ஜ்வாலைகளை! எத்தனை புயல்கள் இங்கே வீசுகின்றன! அளவில்லாத நெருப்புக் கடலானது மின்னலைக் காட்டிலும் பிரகாசமான பிரும்மாண்டமான ஒளி அலைகளை வீசுகிறது. இந்த அலைகளிலிருந்து நுரைபோல ஜ்வாலைகள் நொடிக்கு 250 மைல் வேகத்தோடு வீசத் தொடங்கி இரண்டு மூன்று லக்ஷம் மைல்கள் வரை வீசுகின்றன. வர்ணப் படத்தைப் பாருங்கள். இதில் சிறு வட்டம்போல் தெரிவது பூமி. ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக அதே அளவுத் திட்டத்தில் வரையப்பட்டிருக்கிறது.

இதோ சூரியனின் உடல் மணல் மணலாகத் தெரிகிறது.

இதில் பிரும்மாண்டமான குகைகளைப் போலவும் சுழிகளைப் போலவும் தோன்றுகின்றன. எவ்வளவு பெரிய நெருப்புச் சுழல்! எங்கும் ஜோதி! விளிம்பில் அதைக் காட்டிலும் ஒளி மிகுந்த ஜோதி! விளிம்பின் மிகுந்த ஜோதி அருகில் இருப்பதால், நடுவில் உள்ள குறைந்த ஜோதி கறுப்பாகத் தோன்றுகிறது.

"நாம் பூமியிலிருந்து பார்க்கும்போது களங்கம் என்று சொல்லுகிறோமே அது இது தான். இந்தப் படத்தைப் பார்த்தால், நான் சொல்லுவது உங்களுக்கு விளங்கும். இந்தக் களங்கங்களில் சில நமது பூமியைப் போல் பல மடங்கு பெரியவை.

"இவைகளில் இன்னும் ஒரு விசேஷம் இருக்கிறது. பதினொரு வருஷத்துக்கு ஒரு முறை சூரியனில் களங்கங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

"இதற்குக் காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. சூரிய களங்கங்கள் அதிகமாகக் காணும்போது ஒன்பது கோடி மைலுக்கு அப்பாலுள்ள நமது பூமியில் எத்தனையோ விபரீதமான காந்த விளைவுகளும், மின்சார விளைவுகளும்மற்றவைகளும் ஏற்படுகின்றன. இன்னும் உள்ளே போனால், இதைவிட உஷ்ணம் அதிகம். நடு மையத்தில் சுமார் இரண்டரைக் கோடி டிகிரி இருக்கலாம் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே பார்ப்பதற்கு ஏற்றதாக ஒன்றும் இல்லை. இனிமேல் திரும்புவோமா?"

"சரி, திரும்புவோம்."

"சூரியனைப் பற்றி இன்னும் ஒன்றே ஒன்று சொல்ல வேண்டும். வானத்திலே கோடிக் கணக்கான நக்ஷத்திரங்கள் இருக்கின்றன அல்லவா? அவற்றுள் நமது சூரியனும் ஒன்று."

"சூரியன் மிகப் பெரிய நக்ஷத்திரமா?" என்றான் கண்ணன்.

"இல்லை, அது சிறிய நக்ஷத்திரங்களில் ஒன்று, நமக்கு அது கிட்ட இருப்பதால், அவ்வளவு பெரியதாகத் தெரிகிறது. திருவாதிரை என்னும் நக்ஷத்திரம் சூரியனைப் போல் ஆயிரம் மடங்கு பெரிது. திருவாதிரையைவிடக் கேட்டை இன்னும் பெரிய நக்ஷத்திரம்.

"சூரியன் நடுப்பிராயத்தில் உள்ள நக்ஷத்திரம். வெள்ளை வெளேரென்று ஜொலிக்கும் நக்ஷத்திரம் இளைய பிராயத்தில் உள்ளது. சற்றே மஞ்சள் நிறமானது நடுப்பிராயத்தில் உள்ளது. சிவப்பு நிறமானது வயதான நக்ஷத்திரம். அதற்குப் பிறகு, ஒளி மங்கி இருண்டு போன நக்ஷத்திரத்தை இறந்து போன நக்ஷத்திரம் என்று சொல்லலாம்.

"சூரியன் இன்னும் கோடானுகோடி வருஷங்கள் வாழ்ந்து, நமக்கு ஒளியும் வெப்பமும் அளித்து, நம்மைக் காப்பாற்றி வரும். அதைப்பற்றிக் கவலையே வேண்டாம்" என்று முடித்தார் விஞ்ஞானம்.

"சூரியலோக யாத்திரை முடிந்து, சுகமாக வீடு வந்து சேர்ந்தோம்" என்றார்கள் கண்ணனும் ராதாவும்.

ஐஸ் புரூட் வழக்கு

திருச்சி அண்ணு

பாத்திரங்கள்:

1. பஞ்சாயத்தில் ஒருவர். 2. மற்றொருவர். 3. இன்னொருவர். 4. ஐஸ் புரூட் வாங்கியவர்-வாதி. 5. விற்றவர்-பிரதிவாதி. 6. வாதியின் சாட்சி, 7. பிரதிவாதியின் கையாள்.

காட்சி-1

2: கேளுங்க, உலகத்து அதிசயத்தை! சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னால் சீனவிலே கட்டிய பெருஞ்சுவர் இன்னிக்கும் இருக்கு அதன் நீளம் 1400 மைல். உயரம் 18 அடியிலேருந்து 30 அடிவரை. மனிதன் செய்த காரியம் சந்திர மண்டலத்திலிருந்து பார்த்தாலும் தெரியுமாம்.

3: இதைவிட அதிசயம் தெரியுமா உங்களுக்கு? அண்ட சராசரங்களையும் தாண்டிப் போகும்படியான ஒரு காரியம் செய்வாங்களே; அதான் புளுகு. மனிதன் சரடு திரிக்கத் தொடங்கிஞல் அது எங்கே போய் நிக்கும் என்று சொல்ல முடியுமா?

2: அது இருக்கட்டும். உலகிலே எத்தனை பேர் பொய் சொல்றதா நினைக்கறீங்க?

1: நம்மைத் தவிர கணக்கு எடுங்க. (சிரிப்பு)

3: இருங்கய்யா. 'நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.' இதுவே, நாம் செய்ய வேண்டிய பிரசாரம். பொய் என்பதை, கிழிஞ்ச வேட்டி, கிழிஞ்ச சொக்காயைப்போலத் தூர எறிஞ்சுடணும். உண்மை என்ற தூய ஆடையை அணிய வேண்டும். அது மதிப்பைத் தரும்; உயர்வைக் கொடுக்கும்.

3: ரொம்ப சரி. இன்னிக்கு என்ன வழக்கு?

1: ஐஸ் புரூட் விற்ற வழக்கு.

2: அது என்ன விவரம்?

3: அதோ ஆளுங்க கூடியிருக்கு. விசாரணை நடத்திஞல் புரிஞ்சுட்டுப் போவுது.

2: சரி, விசாரணை தொடங்குவமே.

1: அன்பர்களே! நாம் இங்கே கூடியுள்ளதன் நோக்கம் யாவரும் அறிந்ததே. நம்மிடையே பல பூசல் எழலாம். உண்மையை மறைத்துப் பேசலாம். பொய்யைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதும் உண்மையை உயர்விப்பதும் சண்டைக்காரர்களுக்குள் சமரஸம் ஏற்படுத்துவதுமான வகையில் சேவை செய்து வருகிறோம். அதுபோல் இன்று ஐஸ் புரூட் வழக்கைத் தீர விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டியது நமது கடமையாகும். சந்தானத்தைக் கூப்பிடுங்க!

காட்சி-2

ஓர் ஆள் : சந்தானம்! சந்தானம்! சந்தானம்!

4: இதோ வந்தேன். நமஸ்காரம்.

1. இப்படி வாங்க. உங்கள் வழக்கைச் சொல்லுங்க.

4: நான் ஐஸ்புரூட் வாங்கினேன், அதோ நிக்கிருனே அந்தப் பையன்கிட்டே.

1: ஓகோ. உன் பேரென்ன, தம்பி?

5: எம் பேரு கனகசபை.

2: கனகசபை என்ற பையனிடம் ஐஸ் புரூட் வாங்கினீங்க. சரி, அப்புறம்?

4: அதுக்கு அவன் பணம் கேக்கருன்.

3: பின்னே கேக்காமெ என்ன செய்வான்?

4: நான் துட்டு கொடுத்துட்டேன். இவன் மறுபடி வந்து கேக்கருன்.

5: ஏனய்யா பொய் பேசறே? யாருகிட்டே குடுத்தே? எப்ப குடுத்தே?

4: இன்னொரு பையன் வந்து வாங்கிட்டுப் போனுனே. அவன் யாரு?

5: யாரு கண்டாங்க? எவன் கிட்டே குடுத்தியோ?

1: தம்பி, நீ கொஞ்சம் சும்மா இரு. உன்னைக் கேட்கும் போது பதில் சொல்லு. என்னய்யா, சந்தானம்! என்ன நடந்தது? ஆதியோடந்தமாச் சொல்லு.

4: நேற்று சனிக்கிழமை மத்தியானம் இந்தப் பையன் ஐஸ் புரூட் வித்துக்கிட்டு வந்தான். நான் வாங்கினேன்.

2; எத்தனை வாங்கினே?

4: நாலு ஐஸ் புரூட் வாங்கினேன். விலை ஒரு அணு. என்னிடம் சில்லறை இல்லை.

2: சில்லறையே இல்லாமலா வாங்கித் தின்னே? சரியான ஆளய்யா நீ!

4: இல்லியே, கேளுங்க. "அஞ்சு ரூபாய் நோட்டா இருக்கு. உங்கிட்டே சில்லறை இருக்குதான்?'னு ஐஸ் புரூட் காரனைக் கேட்டேன். அவனிடமும் இல்லே. "பின்னே சாயங்காலமா வந்து துட்டு வாங்கிட்டுப் போ"ன்னு சொன்னேன்.

2: சரி, அப்புறம் சாயங்காலம் அணுவைக் கொடுத்தீங்களா?

4: ஆமா, கொடுத்துட்டேன்.

5: என்னய்யா தபாய்க்கிறே? யாருகிட்டே குடுத்தீங்க? எங்கிட்டேயா?

1: நீ பேசாமெ இரு, தம்பி. நீங்க சொல்லுங்க சந்தானம். ஐஸ் புரூட் இந்தப் பையன் கிட்டேதானே வாங்கினீங்க?

4; ஆமா.

1: சில்லறை குடுத்தது யாரு கிட்டே?

4: இன்னொரு பையன் வந்து, "ஒரு அணு சில்லறை பாக்கி குடுங்க" அப்படின்னு கேட்டான். அவன் அடையாளமா ஒரு அணு கேட்கவே, நான் குடுத்தேன். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் இவன் வந்து, "சில்லறை எடு" அப்படின்னுன். "எத்தனை தரம் குடுப்பாங்க? துட்டு குடுத்தாச்சு. பையன் வந்து வாங்கிட்டுப் போனுன்" அப்படின்னு சொல்லி, பையனுடைய அடையாளமும் விளக்கினேன். 'அதெல்லாம் எனக்குத் தெரியாது, பணத்தை

எடுங்க" அப்படின்னு இவன் சண்டை போடறுன்.

1: சரி, நீங்க போகலாம். கனகசபையைக் கூப்பிடுங்க!

ஆள்: கனகசபை! கனகசபை! கனகசபை!

5: நமஸ்காரம். அவரு நாலு ஐஸ் புரூட் வாங்கினது வாஸ்தவம். "சில்லறை இல்லே; சாயங்காலம் வா'ன்னு சொன்ருரு. அப்ப வந்து கேட்டால், "ஏதுடா? பணம்? ஊரை ஏய்க்கவா பாக்கறே?" அப்படின்னு திட்டினுரு. "பணத்தை வச்சுட்டு மறுஜோலி பாரு"ன்னு நான் கூப்பாடு போட்டேன். பின்னே பாருங்களேன், ஐஸ் புரூட் வாங்கித் தின்னுட்டு, துட்டு குடுக்காமெ மிரட்டினு சும்மாப் போவாங்களா?

4: நான் துட்டு குடுத்தாச்சு. ஏமாத்த நினைக்கல்லே. இதோ, கோபாலன் சாட்சி.

6: ஆமா, சந்தானம் பணம் குடுக்கும்போது நான் பக்கத்திலே இருந்தேன்.

5: என்னய்யா சாட்சி, பணம் எங்கிட்டயா குடுத்தாரு?

6: உங்கிட்ட இல்லே! ஆனு உன்னைப்போல இன்னொரு பையன்கிட்டே. நீ வாங்கிட்டு வரச் சொன்னதாகச் சொன்னுன்.

5: நான் யாரையும் அனுப் பலேயே.

2: அப்போ வாங்கிட்டுப் போனது யாரு?

5: என்னுங்க இது? பஞ்சா யத்தாருமா இதை நம்பறீங்க? வெறும் கட்டுக்கதை இது. சாமான் எங்கிட்டே வாங்கித் தின்னுட்டு, வழியிலே போன வீரப்பன்கிட்டே பணம் குடுத் தேன்னு சொல்றதா' சரக்குக் குடுத்தவன் பணம் கேக்கறேன். குடுக்க வேண்டிய நியாயம் இல்லேயா? பஞ்சாயத்தாரே பாத்துத் தீர்ப்புச் சொல்லுங்க!

4: நான்தான் தண்டம் அழுதேனே.

1: தம்பி, அதுக்கு என்ன செய்யறது? காரியத்தை ஒழுங்குமுறையாச் செய்யவாண் டாமா? சரக்குக் குடுத்தவனே விட்டு, இன்னொருத்தன் கிட்ட பணம் குடுத்தது பெரிய முட் டாள்தனம். உனக்குத் தெரி யாத ஆள் வந்தா, அவனைத் திருப்பி அனுப்பாம பணத்தைக் குடுத்தது யார் மேலே தப்பு? அதுக்குக் கனகசபை பொறுப் பாளியாக முடியாது. இவ னிடம் வாங்கிய ஐஸ் புரூட்டுக் குப் பணம் இவனிடமேதான் சுொடுக்கவேண்டும். இதுவே நியாயம்.

2: ஆமா. அதான் நியாயம்! எவ்வளவு தம்பி, சில்லறை?

4: ஒரு அணுதான்.

2: பின்னே சந்தானம், அணுவைக் குடுத்துடுங்க.

1: இவ்வளவு தூரம் வழக் காடி வம்புக்கு நின்னதுக்காக, இன்னும் ரெண்டணு சேத்துக் கொடுக்க வேண்டியதுதான் நியாயம்.

2: ரொம்ப நியாயம்! அபரா தம் சேத்து, மூணு அணுவாக் குடுங்க, சந்தானம்.

4: இது ரொம்ப அக்கிரமம். இது அடுக்குமா'

3: உஸ் மூச்சுக் காட்டப் படாது. முதல்லே சில்லறை யைக் குடுத்துட்டுப் பேசுங்க.

4: இந்தாங்க. உங்க கையா லேயே குடுங்க.

2: சரி எடு...! இந்தாய்யா கனகசபை, பிடி மூணு அணு.

5: ரொம்பச் சந்தோஷம். நான் போயிட்டு வறேன்.

1: சரி, சபை கலேயலாம். (அருகிலுள்ளவரிடம் மெது வாக) கொஞ்சம் இருந்து போகலாமே. உட்காருங்க. (ஒரு பஞ்சாயத்தாரிடம் ரகசிய மாக) ஆமா, நீங்க பின்னு லேயே போய்க் கவனிச்சு, காரி யத்தைப் பாத்துட்டு வாங்க.

3: சரி, இதோ போறேன்! (போகிருர்.)

காட்சி-3

4: இருந்தாலும் இது ரொம்ப அக்கிரமம். கனகசபை பெரிய புரட்டுக்காரன்.

2: எது ஐயா அக்கிரமம்?

4; இங்கே இப்ப பஞ்சா யத்து என்ற பேரால் நடந்தது தான் அக்கிரமம். அந்தப் பயல் பெரிய ஏமாத்துக்காரன். அவன்

பேச்சை நம்பி, எனக்குத் தண்டம் வச்சீங்களே, இது அடுக்குமா? வயிறு எரியுதுங்க.

2; அப்படியானு ரெண்டு ஐஸ் புரூட் சாப்பிடுங்களேன், பாவம்! (சிரிப்பு)

4; ஏனய்யா இப்படி எரியற நெருப்பிலே எண்ணெய் ஊத்தறீங்க? எருது நோவு காக்கைக்குத் தெரியுமா?

1: பாவம், உமக்கு விஷயமே விளங்கலே. அமாமெ கொஞ்சம் இருங்கையா. எல்லாம் புரியும்.

4: இன்னும் என்ன பாக்கி இருக்கு?

1: நிறைய இருக்கு. எல்லாம் தானே தெரியும். கொஞ்ச நேரம் சும்மா இருங்க.

காட்சி-4

2: அதோ பாருங்க. வருவது யாரு, புரியுதா? சந்தானம், உங்களைத்தான்!

4; ஐஸ் புரூட் பையனும், துட்டு வாங்கிட்டுப்போன பையனும் வர்ருங்களே.

6: ஆமாங்க. அவனே தான் இவன்கிட்டே துட்டு குடுத்தது.

3; நீங்க சொன்னபடி, ஐஸ் புரூட் பையன் பின்னேயே போனேன். நான் எதிர்பார்த்தபடி, அவனுக்கும் இவனுக்கும் காம்பவுண்டுக்கு வெளியே சண்டை நடந்திச்சு. ரெண்டு பேரையும் பிடிச்சுக்கிட்டு வந்தேன்.

1: என்ன சமாசாரம். தம்பி!எதுக்குச்சண்டை போட்டீங்க?

7: ஐஸ் புரூட் கனகசபைக்கும் எனக்கும் ஒப்பந்தம் உண்டுங்க! அதாவது இவன் சரக்குக் குடுத்த இடத்திலே நான் போய், பணம் வாங்கிட்டு வந்துடறது. நான் சரக்குப் போட்ட இடத்திலே போய், இவன் வாங்கி வந்துடுவான். கடைசியிலே நாங்களே நேரிலே போய்ச் சண்டை போட்டு, அவுங்கவுங்க பணத்தை வாங்கிட்டும் வந்திடுவோம். அப்படி வந்த லாபத்தை ரெண்டு பங்கு போட்டு, ஆளுக்கு ஒரு பங்குன்னு ஒப்பந்தம். இப்ப மூணு அணு வந்திச்சே. இது அப்படியே லாபந்தானே? என் பங்கு தரவாண்டாம்? அப்படியே கம்பியாயிடலாம்னு பார்த்தான்.நான் வளைச்சுக்கிட்டேன்.

5: அட போடா, முட்டாள் பயலே!

1: உஸ்...கத்தாதே தம்பி. கெட்டிக்காரன் புளுகு எட்டு



நாளையிலே வெளியாகுமின்னு சொல்லுவாங்க. உன் புளுகு உடனேயே அம்பலமாயிப் போச்சே!

4: நான்தான் அப்பவே சொன்னேனே, கேட்டீங்களா!

1: தம்பி சந்தானம், எங்களுக்கு எல்லாம் முந்தியே தெரியும்! தெரிஞ்சுதான் ஆளை அனுப்பி இவுங்களைப் பிடிச்சோம்! விஷயம் விளங்காமெ, உனக்குத்தான் கோபம் வந்திச்சு.

4: ஏதோ தெரியாத்தனம். மன்னிச்சுடுங்க!

5: ஆமாங்க. அப்படித்தானுங்க. என்னையும் மன்னிச்சுடுங்க இனிமே ஜாக்கிரதையா இருக்கேன்.

2: எது. குட்டு வெளியாகாத வழியிலே ஜாக்கிரதையா இருக்கப் போறியா?

1: (சிரிப்பு) இந்த வயசிலேயே இத்தனை பொய்யும் வஞ்சனையும் இருக்குதே. பெரியவனாகும்போது பெரிய ஆபத்திலே கொண்டுபோய் விடுமே, தம்பீ! இப்பவே திருத்திக் கொள். அஞ்சுலே வளையாதது அம்பதுலே வளையுமா? இப்பவே ஒழுங்கா இரு! பொய் பேசாதே! எப்போதும் உண்மையே பேசு! உண்மையாகப் பாடுபடு!

3; சரீங்க. அப்படியே செய்யறேனுங்க. நான் வறேங்க!

1: இரு தம்பி, நடந்தவரையிலே அதன் பலனை அநுபவிக்க வாணுமா?

7: என்ன செய்யச் சொல்றீங்க?

1: சந்தானத்தின் துட்டை அவரிடமே திருப்பிக் கொடு.

5: இந்தாங்கய்யா மூணு அணு.

7: இந்தாங்க, நான் வாங்கின ஒரு அணு.

1: இப்ப கையிலே எத்தனை ஐஸ் புரூட் இருக்கு?

5: எங்கிட்டே பத்து இருக்குது. நீங்க எடுத்துக்கிடுங்க.

7: எங்கிட்டே ஆறு இருக்குது. இந்தாங்க!

1: அதெல்லாம் வாண்டாம். தம்பிகளா! ஐஸ் புரூட்டுகளை அப்படியே நீங்க ரெண்டு பேரும் சாப்பிடவேண்டியது. எங்கள் கண் முன்னலே சாப்பிடவேணும்! இதுதான் உங்களுக்குத் தண்டனை!

5: ஐயோ! உடம்புக்கு ஆகாதுங்களே!

1: அப்படிப்பட்டதை வியாபாரம் பண்ணலாமா?

7: தப்புதான், இனிமே செய்யமாட்டோம். வேறே தொழில் பார்க்கறோம். ஐஸ் புரூட்டை ஆற்றிலே போட்டுவிட்டுப் போகும்படியா உத்தரவு ஆகட்டும்.

1: சரி, அப்படியே செய்யுங்க. பொய் புரட்டுக்கு அதுவே தண்டனை! (திரை)

முத்து வறுவல்

கே. சுந்தரேசன்

குமரேசனுக்கு இரவு தூக்கமே வரவில்லை. படுக்கையில் புரண்டு, புரண்டு அவதிப்பட்டான். மனநிம்மதி இருந்தால்தானே தூக்கம் வரும்? மறுநாள் காலை அரசன் அவர்கள் கிராமத்துக்கு விஜயம் செய்யப்போகிறார். கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் அரசனுக்கு விருந்துகள் வைத்துச் சிறப்பிக்கப் போகிறார்கள். தானும் அரசனைத் தன் வீட்டுக்கு அழைத்து விருந்து வைக்க வேண்டும் என்ற ஆசை. ஆனால் ஆசையை நிறைவேற்ற அவன் நிலை அநுமதிக்கவில்லை. ஏழையிலும் பரம ஏழை அவன். நான்கு நாட்களாகக் கிராமத்திலுள்ளோர் எல்லோரும், 'அரசன் செழிப்பு மிகுந்த நம் கிராமத்தைப் பார்வையிட வரப் போகிறார். நாங்கள் எல்லோரும் ஒவ்வொரு நாள் அவரை அழைத்து விருந்துகள் வைக்கப் போகிறோம். நீ எங்கே விருந்து வைக்கப் போகிறாய்? உனக்கே நல்ல சாப்பாடு கிடையாதே! விருந்தென்று கேள்வி பட்டிருக்க மாட்டாயே!' என்பது போல் அவனை இகழ்ந்து பரிகசித்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவன் மனத்தை விட்டு அகலவே யில்லை. ஊரிலுள்ளோர் எல்லோரும் பணக்காரர்களாக இருக்கும்போது தான் மட்டும் ஏழையாக இருப்பானேன் என்று அவன் மனம் புழுங்கினான்.

மறுநாள் காலை அரசன் கிராமத்துக்கு வந்தான். எல்லோரும் அரசனை வெகு சிறப்பாக வரவேற்று உபசரித்தனர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டில் அரசனுக்கு விருந்து நடந்தது. இன்னும் இரண்டு நாட்கள்தான் அரசன் கிராமத்தில் இருக்கப் போகிறான். குமரேசன்

எப்படியும் அரசனைத் தன் வீட்டுக்கு அழைத்து விருந்து வைத்து விடுவது என்று தீர்மானித்தான். ஆனால் எப்படி வைப்பது என்றுதான் புரியவில்லை. அச்சமயம் அங்கு வந்த அவன் மனைவி பார்வதி அவன் வருத்தத்தைத் தெரிந்துகொண்டாள். அவள் சிறிதும் கவலையே படவில்லை. குமரேசனைப் பார்த்து, "இதற்காகவா கவலைப் படுகிறீர்கள்? நாளை அரசனை நம் வீட்டுக்கு அழைத்து விருந்து வைத்து விடுவோம். இதென்ன பிரமாதம்" என்றாள் அலட்சியமாக. பணத்தைக் கொடுக்காத கடவுள் தைரியமுள்ள சாமர்த்தியமான மனைவியையாவது கொடுத்தாரே என்று மகிழ்ந்தான்.

பார்வதி தன் கணவனையும் அழைத்துக்கொண்டு அரசன் முன்னிலையில் போய் நின்றாள்.

"அரசே! முத்து வறுவல் வறுத்து புஷ்பரசம், வைத்திருக்கிறேன். நம் வீட்டுக்குச் சாப்பிட வரவேண்டும் என்று அழைத்தாள். இதேபோல் ஊரில் சிலரையும் அழைத்தாள். கிராமத்தில் உள்ளோர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'ஏழை இவள். முத்து வறுவல் வறுப்பதா? பூ ரசம் வைப்பதா? அரசனை அவமதிக்க ஏற்பாடு செய்திருக்கிறாள் போலிருக்கிறது!' என்று கூடிக்கூடி பேசிக்கொண்டார்கள். இதையெல்லாம் பார்வதி லட்சியமே செய்யவில்லை.

அரசனே மிகுந்த திருப்தியுடன் விருந்துக்கு வர இசைந்து விட்டான். வீடு திரும்பிய பார்வதி நெல்லை நன்றாகக் குத்தி வெண்மையான அரிசியாக்கினாள். முழு அரிசியாகப் பொறுக்கி எடுத்துச் சமைத்தாள். மோரில் ஊற வைத்துப் பிறகு காய வைத்த மணத்தக்காளி வற்றலைப் போட்டு வறுத்தாள். வீட்டின் பின்புறமுள்ள வேப்பமரத்திலிருந்து நல்ல வேப்பம்பூவாகப் பொறுக்கி வந்து ரசம் வைத்தாள். வீட்டை மெழுகி, கோலமிட்டு, மஞ்சள் பூசி அலங்கரித்து வைத்தாள்.

அரசனும் வந்தான். மிகுந்த பக்தியுடன் குமரேசனும் பார்வதியும் அரசனை வரவேற்று உபசரித்தனர். வாழை இலை போட்டுப் பார்வதி பரிமாறினாள். அரசனும் மிகுந்த ஆவலுடன் சாப்பிட்டான். தினம் விருந்தாகவே சாப்பிட்டு அலுத்துப் போய், பத்தியச் சாப்பாட்டை வாழ்நாளில் கண்டிராத அரசனுக்கு நறுமணம் வீசும் வேப்பம் பூ ரசமும், வற்றலும் அமிர்தமாயிருந்தன. அன்றுதான் மனசுக்குத் திருப்திகரமான சாப்பாட்டைச் சாப்பிட்டது போல் அரசன் முகமும் மலர்ந்தது. தன் மனசுக்குப் பிடித்த போஜனம் அளித்த குமரேசனையும், அவன் மனைவியையும் அரசன் வாழ்த்தி அவர்களுக்கு ஏராளமான பொருளையும் அளித்தான். அவர்கள் வறுமையையும், அன்பையும் கண்ட அரசன் குமரேசனுக்குத் தன் அவையில் வேலையும் கொடுத்தான். கிராமத்து மக்கள் அனைவரும் வியந்தனர். குமரேசன் மனைவி பார்வதியின் அறிவைப் பாராட்டினார்கள்.

காப்பி எங்கே?

பி. எஸ். பாலன்

(தர்பாரில் எமன் வீற்றிருக்கிறார். அவரது சிம்மாசனத்தின் பக்கத்திலே ஒரு சிற்றாசனத்தில் சித்திரகுப்தன் தூங்கி விழுகிறான்.)

எமன்: (சித்திரகுப்தனைப் பார்த்து) ஐயா குப்தரே! என்ன தூங்கிவிழுகிறீர்! எழுந்திருமையா! போய், குழாயிலே முகத்தைக் கழுவிக்கொண்டு ஒரு கப் காபி வாங்கிக் குடித்துவிட்டு வாருமையா? அப்படியே எனக்கும் ஒரு கப் வாங்கிக்கொண்டு வாரும். இந்தாரும், இரண்டணா.

சி. குப்தன்: (தலையைத் தடவிக்கொண்டே) ஆ..மாம்...மன்னிக்கணும். (வெளியே சென்று சிறிது நேரங்கழித்து வருகிறார்) பிரபூ! இன்று 'காண்டீன்' ஸ்டிரைக்காமே. அவர்களுக்குச் சம்பளம் உயரவேண்டுமாம். ஆகையினாலே கடை மூடி இருக்கு..!

எமன்: ஆகையினாலே கடையை மூடிவிடுவதா என்ன! முட்டாள் பசங்கள்! ஆமாம் 'ஸ்டிரைக்'குன்னா என்ன?

சி. குப்தன்: அது பூலோகத்திலிருந்து வந்த ஒரு தொத்து வியாதி.

எமன்: 'ஸென்ஸ்' இல்லாதவர்கள்! யாரங்கே? (ஒரு சேவகன் வருகிறான்) போய் ஒரு 'ஸ்டவ்', காபிப்பொடி, பால், சர்க்கரை, தண்ணீர் முதலியன கொண்டு வா! என்ன குப்தரே.. ஆகையினாலே நாமே தயாரித்துக் கொள்ளலாம். (சேவகன் தயங்கி நிற்கிறான்) என் நிற்கிறாய், என்ன விசேஷம்?

சேவகன்: மன்னிக்கணும்! நமது எமபுரியிலேயே ஒரு காபிக் கொட்டை, ஒரு பிடிப்பொடி ஒண்ணும் கிடையாதுங்க.

எமன்: சேச்சே..என்ன இது? நமது எமபுரி வரவர ராயலசீமாவாகிக்கொண்டே வருகிறது!.. சித்திரரே, ஆகையினாலே வேறே எங்கே கிடைக்கும்?

சி. குப்தன்: பூலோகத்தில்...!

சேவகன்: (குறுக்கிட்டு) அங்கேயும் கிடைப்பது அபூர்வமாம்.

எமன்: என்ன இது, ஒரு கப் காபிக்குக்கூடக் கதி இல்லையா? (அவசரம் அவசரமாக) குப்தரே, ஆகையினாலே சீக்கிரம் கேஸ்களை முடியுங்கள். பூலோகத்துக்காவது போனால் அங்கே காபி கிடைக்குமல்லவா?

சி. குப்தன்; ஆமாம், அதுதான் சரி. (கணக்குப் புஸ்தகத்தைப் புரட்டிக்கொண்டே, ஊம்.. அடுத்தது மங்களா விலாஸ் மானேஜர் மாரிசாமி. மாரிசாமி..!

எமன்: எய், மாரிசாமி! நீ அநேக பாவங்கள், கொடுமைகள் தீமைகள், குற்றங்கள், துன்பங்கள் தீங்குகள், பொல்லாங்குகள், கேடுகள்..ஊம், வந்து கேடுகள் செய்தாய். ஆகையினாலே..

மாரிசாமி: எங்க, ராசாவே! உங்க அகராதியிலே வேறே வார்த்தைகளே இல்லையா?

சி. குப்தன்: உஸ்..ஸ்.... பேசாதே! அவருக்குக்கோபம் வந்தால்...?

எமன்: என்ன பேச்சு அங்கே? சொல்வதைக் கேள். எனக்கு 'டைம்' ஆகிறது......ஆகையினாலே நீ உனது ஹோட்டலில் காபிக்கு என்ன செய்தாய்?

மாரிசாமி: நானு உண்மையைச் சொல்லிவிடுகிறேன்... 'பிளாக்'கிலே - அதுதானுங்க...... கள்ளமார்க்கட்டிலே வாங்குவேன். ...கொஞ்சம் புளியங் கொட்டையைச் சேர்த்து, அடிச்சு, வறுத்து, இடிச்சு, கலந்தா:..

எமன்: போதும்!..போதும்! இப்பொழுது எனக்குக் காபிக் கொட்டை ஒரு பத்து வீசை உடனே தேவை. குப்தரே! ஆகையினலே ஒரு கயிற்றைக் கட்டி இவனைப் பூலோகத்தில் விடும். காபிக்கொட்டையுடன் மேலே வரட்டும்.

மாரிசாமி: ரொம்ப 'தாங்க்ஸ்'. நான் வருகிறேன்.

(இருவரும் போகின்றனர். சிறிது நேரத்திலே சித்திரகுப்தன் மட்டிலும் திரும்பி வருகிறான்.)

சி. குப்தன்: ஐயனே! அனுப்பி விட்டேன் மாரிசாமியை! ஒரு விண்ணப்பம். நமது ஏஜண்டுகள் எல்லாரும் ஒரே சமயத்திலே பூலோகத்திற்குப் போகத் துள்ளுகிறார்கள். என் என்று கேட்டால் இங்கே காபி இல்லையாம்; அங்கே போனால் கிடைக்குமாம்! உங்களிடம் கேட்க வருகின்றனர்.

எமன்: ஆகையினாலே வரச் சொல்லும். (ஒரு கூட்டம்

உள்ளே நுழைகிறது) என்ன, ஹார்ட்டு பெயிலியரே, ஆக்ஸி டெண்டாரே, டி. பி. யாரே. மலேரியாவாரே! வருக, வருக! உங்களை ஏஜண்டுகளாக அடையப் பெற்ற நாம் சந்தோஷத்திற்குள் ளாகிறோம். என்ன விஷயம்?

ஆக்ஸிடெண்டு: நாங்கள் எல் லாரும் பூலோகத்துக்குச் செல்ல வேண்டும்.

எமன்: என்ன, எல்லோரும் பூலோகத்துக்குச் செல்லவேண் டுமா? அது முடியாத காரியம். அவரவர் முறை வரும்பொழுது தானே போகமுடியும்?

எல்லோரும்: இங்கு ஒரு சொட்டுக் காபிகூட இல்லையே? நாங்கள் என்ன செய்வோம்? ஆகை யால் பூலோகத்தில்...?

எமன்: கற்றுக் கொடுத்தவர் களிடமே மறுபடியும் கேட்பதா? ஆகையினாலே..

ஹார்ட்டு பெயிலியர்: நீங்களே இப்படிச் சொன்னால் எப்படி? ஏதோ, நீங்களும் வாருங்கள், போகலாம்.

எல்லோரும்: ஆம், வாருங்கள், வாருங்கள்!

(எல்லோரும் பூலோகத்தை நோக்கிச் செலகின்றனர்)

காட்சி - 2

(பூலோகத்தில் ஒரு மனிதன்.)

எமன்: ஏனப்பா! இங்கே காபிக்கொட்டை...

மனிதன்: அந்தப் பேச்சே எடுக் காதீர்கள்! நாங்கள் காபியை மறந்து மாசம் ஒண்ணாச்சே.

எமன்: என்ன! இங்கே காபியே இல்லையா? என்ன செய்வது?

சி. குப்தன்: (எமன் காதருகில்) என்? தேவலோகத்தில் தேடினால்?

எமன்: ஆம், அதுதான் நல்லது! ஆகையினாலே..எல்லாரும் தேவ லோகத்திற்குச் செல்வோம்.

(எல்லாரும் போகின்றனர்.)

காட்சி - 3

(தேவலோகத்தில் தேவேந்திர னும் தேவர்களும் மரியாதையாக நிற்கிறார்கள். சிவபெருமான் விஜ யம் செய்திருக்கிறார்.)

எமன்: (தனக்குள்) அடே, பெரியவர்கூட இங்கே இருக்கிறார்! (தன்னுடன் வந்தவர்களை நோக்கி) எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அப்படியே நாம் செய்தால் என்ன? எல்லாருமாக ஒரு 'கோரஸ்' பாடிக்கொண்டே போகலாம்... உம் ஆரம்பியுங்கள்.

(எல்லோரும் பாடுகின்றனர்)

சம்போ மகாதேவா - சாம்ப சதாசிவா
சங்கடப் படுகிறோம் - ஸ்டிராங் காபி
இல்லாமல்!
உடனே கிடைக்க வரமருள்வீர்!
இன்றேல்
திடமே கொண்டோம் மறியல் செய்ய.

சிவன்: போதும்! போதும்!

(அவரும் பாடுகிறார்)

இருந்தால் தருவதற்குத்
தயங்கேன் நான் -
மருந்துக்கு ஒரு கொட்டையும்
இல்லையப்பா!

சி. குப்தன்: இங்கேகூட இல்லையா! ஊம்.. (யோசிக்கிறான்) ஐயனே, ஒரு விண்ணப்பம்.

எமன்: என்ன?

சி. குப்தன்: பாற்கடலுக்குச் சென்று, திருமாலிடம்கேட்டால்..

எமன்: சபாஷ், நல்ல யோசனை! சித்திரகுப்தரே, ஆகையினாலே நீரே முன்னால் போய், பாற்கடலில் 'மோட்டார் போட்டு'கள் தயார் செய்யும். நாங்களும் வருகிறோம்.

ஒரு குரல்: நானே வருகிறேனே. (திருமால் காட்சியளிக்கிறார்)

சிவன்: பூலோகத்திலும் எமபுரியிலும் கொஞ்சங்கூடக் காபியே இல்லையாம்!

திருமால்: எல்லாரிடமும் நான் மன்னிப்புக் கேட்கத்தான் வந்தேன். என் பாற்கடலைக் காபிக் கடலாக்க வேண்டும் என்று ஓர் ஆசை வந்தது. ஆதலால் எல்லாக் காபியையும் பிளாக் மார்க்கெட்டில் வாங்கி வைகுண்டம் கோ-டௌனுக்கு எடுத்துச் சென்றேன். பிறகு என் மனைவி லக்ஷ்மி, 'இடத்தை அடைக்கிறீர்களே, அப்படி இப்படி' என்று சண்டைக்கு வந்தாள். அவள் வாய்க்குப் பயந்து எல்லாவற்றையும் இதோ கொண்டுவந்திருக்கிறேன். ஏ, காபி மூட்டைகளே! செல்லுங்கள்! (காபி மூட்டைகள் வருகின்றன.)

எமன்: வாருங்கள் எல்லாரும்! ஆகையினாலே காபிக்கு 'வெல்கம்' கொடுக்கலாம். (ஒரே கரகோஷம்.)

அவர்தான் சாமி

ஜோதிமாமா

என்ன தின்று வந்தாய்?
இனிய பழம் தின்றேன்.
பழம் பழுப்ப தெங்கே?
பழம் மரத்தில் பழுக்கும்.
மரம் வளர்வ தெங்கே?
மரம் நிலத்தில் வளரும்.
நிலத்தைத் தந்த தாரோ?
நினைத்தேன் தெரியவில்லை.
அவர்தான் அப்பா சாமி.
அவர் படைத்தது பூமி. (1)

நீ என்ன உண்டாய்?
நெல்லுஞ் சோறு உண்டேன்.
நெல்விளைவ தெங்கே?
நெல் வயலில் விளையும்?
வயலில் பாய்வதென்ன?
வயலில் தண்ணீர் பாயும்.
தண்ணீர் தந்தவர் ஆரோ?
தந்தாரைநான் அறியேன்:
அவர்தான் அப்பா தெய்வம்.
அவரைத் துதி செய்வோம். (2)

எப்படி நீ பார்ப்பாய்?
இரண்டு கண்ணால் பார்ப்பேன்.
எப்படி நீ கேட்பாய்?
இரண்டு காதால் கேட்பேன்.
எப்படி நீ பேசுவாய்?
எனது வாயால் பேசுவேன்.
இத்தனையும் தந்ததார்?
எனக்குத் தெரியாதே.
அவர்தான் அப்பா கடவுள்.
அவர்பதம் தம்பிடுவோம்! (3)

காசி யாத்திரை

கே. எஸ். பி.

அன்று ஞாயிற்றுக்கிழமை. 'மெரினா' பீச்சில் நல்ல கூட்டம். சற்று நேரம் காற்று வாங்கலாமே என்று போய் மணலில் உட்கார்ந்தேன். ஆனால் என் பழைய நினைவு என் கண் முன்பு திரைப்படக் காட்சிபோல உருண்டோடியது. இதே மெரினா பீச்சில் சென்ற வருஷம் நான் என் அருமைத் தங்கையோடு விளையாடிக்கொண்டிருந்தேன். இப்போது அந்தத் தங்கை என் பக்கத்தில் இல்லாததுதான் என் துயரைக் கிளறியது.

எனக்குச் சொந்த ஊர் காஞ்சீபுரம். என் தந்தை சிறு வயதிலேயே காலமாகிவிட்டார். என் பாட்டிதான் என்னையும் என் ஒரே தங்கை ஹேமுவையும் வளர்த்து வந்தாள்.

எனக்குச் சென்னையில் ஒரு மாமா இருக்கிறார். என் தாய் அங்கேதான் இருந்தாள். என் பள்ளிச் செலவுக்கும் அவர்தான் பணம் அனுப்பி வந்தார். இவ்வளவும் அவர் செய்து வந்ததற்குக் காரணம் பாசமல்ல, சுற்றமல்ல; எனக்குச் சொந்தமான மூன்று ஏக்கர் நிலத்திலிருந்து குறைந்த பட்சம் ஆண்டு தோறும் ஐந்நூறு ரூபாயாவது வரும். அதை அவர் பார்வையிலேயே நான் விட்டுவிட்டேன். மயிலாப்பூரில் அவருக்கு ஒரு சொந்த வீடு. அதை வாடகைக்கு விட்டிருந்தார். அது தவிர, திருவல்லிக்கேணியில் ஒரு வீடு. அதில் தான் அவரும் என் தாயும் வசித்து வந்தனர். தங்கை ஹேமாவும் என்னோடு கூடப் படித்து வந்தாள்.

அந்த வருஷம் காஞ்சீபுரம் உற்சவத்துக்குப் பிரமாதமான ஏற்பாடுகள் நடந்துவந்தன. அந்த உற்சவத்திற்கு என் தாய் வந்திருந்தாள். மாமா மாத்திரம் வீட்டில் வேலை இருப்பதாகச் சாக்குப்போக்குச் சொல்லிக் கழித்துவிட்டார். அவரை விடக்கூடாது என்று நான் தங்கையோடு சென்னைக்கு வந்தேன். அப்போது சென்னையிலுள்ள பீச், கோர்ட்டு, மிருகக் காட்சிசாலை இவையெல்லாம் எனக்கு முதல் முதல் அறிமுகம் ஆயின. நான் சாயந்தர வேளைகளில் தங்கையோடு தினமும் 'மெரினா'வில் உலாவுவேன். இப்படி ஒரு வாரம் கழிந்தது.

கடைசியில் நான் மாமாவையும் தங்கையையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டேன்.

வீட்டிலிருந்து கிளம்பும்போது மாமாவின் பெண் கமலா தானும் வருவதாகப் பிடிவாதம் பிடித்தாள். "சரி, வரட்டுமே!" என்று நான் சொன்னேன். "எதற்கடா எல்லாரும்? நான் வருவதே அதிகம்!" என்று மாமா கூறிவிட்டார். கமலாவுக்கு மாமா நிறைய நகைகள் செய்து போட்டிருந்தார். வைர பேஸரி, அட்டிகை, லோலாக்கு எல்லாம் அவள் அழகை

இன்னும் அழகுபடுத்தின. ஆனல் என் தங்கை போட்டிருந்தது எல்லாம் ஒரே ஒரு கழுத்துச் சங்கிலி தான்.

காஞ்சீபுரம் வந்ததும் மாமா சாதாரணமாகத்தான் நடந்து கொண்டார். தினம் என்னேடு கோயிலுக்கு வருவார்; பிரதட்சிணம் செய்வார்; பின்பு வீடு திரும்புவார்.

நான் இதன் நடுவில் ஒரு போட்டிக்கு விடை யனுப்பியிருந்தேன். அது யார் அதிருஷ்டமோ தெரியவில்லை, எனக்கு முதற்பரிசுத் தொகை ரூபாய் இருநூறு கிடைத்தது. வெகு நாளாகத் தங்கைக்கு வளையல் பண்ணிப்போட வேண்டுமென்று எங்களுக்கு ஆசை. யாரோ பணமுடையால் விற்கத் தயாராக இருப்பது தெரிந்தது. இரண்டும் சேரவே மாமாவுக்குத்

தெரியாமலே நான் அந்தத் தங்க வளையலை வாங்கி வந்து ஹேமாவின் கையில் அணிவித்தேன். "ஏதுடா வளையல்?" என்று மாமா கேட்டார். எனக்குப் பரிசு கிடைத்ததைப் பற்றிச் சொல்லப் பயம். ஆகையால் பதில் சொல்லாமலே தட்டிக் கழித்து விட்டேன்.

உற்சவம் முடிந்து மாமா சென்னைக்குப் போனர்.

போனவுடனே எனக்கு ஒரு கடிதம் வந்தது.

"உடனே தங்கையோடு புறப்பட்டு வா!" என்று எழுதியிருந்ததைக் கண்டதும் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. இரவு வண்டியிலேயே தங்கையோடு சென்னைக்குச் சென்றேன்.

போனதும் போகாததுமாக மாமா, "போதுமடா திருட்டுப் பிழைப்பு! உங்களை வீட்டில் வைத்துக் காப்பாற்றி முன்னுக்குக் கொண்டுவருவதே தவறு. கமலாவின் கைவளையலை ஒரு வாரமாகக் காணவில்லையாம். அசட்டுப் பெண், அதுக்கு என்ன தெரியும்? ஹேமு தான் திருடி இருக்கிருள். நான் உன்னைக் கேட்டதற்கு நீ மழுப்பி விட்டாய். உங்களையெல்லாம் வளர்ப்பதே தப்புடா, தறிதலைகளா? எல்லாம் நன்றி கெட்ட கூட்டங்களடா நீங்கள்! அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு சாமர்த்தியமடா திருடுவதற்கு? போலீசில் ஒப்படைக்க வேண்டியதுதான் உங்களை!" என்று பொரிந்து கொட்டினர்.

'போலீஸ்' என்ற சொல்லைக் கேட்டதும் எனக்குப் பயமாகப் போய்விட்டது.

'மாமாவாக இருந்தால் என்ன, சித்தப்பாவாக இருந்தால் என்ன?

ஏழை என்றால் இளப்பம்தானே!' என்று எண்ணிக்கொண்டேன்.

"உண்மையைச் சொல்லுடா!" என அவர் மறுபடியும் கர்ஜித்தார்.

"உண்மை இதுதான் மாமா! ஒரு பகுத்தறிவுப் போட்டியில் எனக்கு இருநூறு ரூபாய் கிடைத்தது. அதற்கு வாங்கிய நகைதான் இது! மாமா! சத்தியமாக என் தங்கை திருடவில்லை" என்றேன்.

"பின்னே இது எது?"

"ஊரில் ஒரு பாட்டியிடம் பழைய விலைக்கு வாங்கினது, மாமா!"

"சரி, வா போவோம், ஊருக்கு!"

ஆனால் அந்த வளையலை விற்ற பாட்டி காசி யாத்திரை போய் விட்டதாகச் சொன்னார்கள்.

மாமா இதையெல்லாம் நம்பவேயில்லை. என் தங்கையின் வளையலை வெடுக்கென்று கழற்றி எடுத்துக் கொண்டு போய்விட்டார்.

அதற்குப் பிறகு அவர் எங்களைத் திரும்பியே பார்க்கவில்லை. ஹேமுவை எங்கள் அக்கம் பக்கத்து வீட்டார்களே வேறு ஊர்ப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தார்கள்.

என் படிப்பு முடிந்ததும் நான் சென்னையில் உத்தியோகத்தில் அமர்ந்தேன். தாயையும் பாட்டியையும் என்னுடன் இருக்கச் சொன்னேன். அம்மாவை எவ்வளவோ சமாதானப்படுத்தியும் ஹேமா அருகில் இல்லாத வருத்தத்தையும், மாமாவின் உறவு அறுந்த துயரத்தையும் அடக்க முடியவில்லை. குழந்தை மேல் திருட்டுப் பட்டம் கட்டியது தான் அவள் நெஞ்சை ஓயாமல் அறுத்தது.

அவள் அதே ஏக்கத்துடன் நோய்வாய்ப்பட்டு இறந்து போனாள்.

அதெல்லாம் பழைய கதை. ஆண்டு ஒன்று உருண்டோடிவிட்டது. எனக்கு இப்போதெல்லாம் உற்ற துணை அறுபது வயதுக்கு மேலான பாட்டிதான். அவ்வளவு துன்பத்திலும் அவள் எனக்கு ஆறுதல் சொல்லிவந்தாள். இன்னும் சில நாட்களில் ஹேமு திரும்பி வந்துவிடுவாள். அது எனக்குச் சற்று மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால் மாமா திருட்டுப் பட்டம் கட்டிவிட்டாரே என்ற துயரம் அகலவே இல்லை.

ஞாயிற்றுக்கிழமை யாதலால் பீச்சுக்குப் போய்க் காற்று வாங்கலாமே என்று வீட்டைவிட்டுக் கிளம்பினேன்.

* * *

கடற்கரை எனக்கு அமைதியைக் கொடுக்கவில்லை. வீட்டுக்குத் திரும்பலாமே என்று கிளம்பினேன். சாலையோரமாக வந்தேன். நாலைந்து அடிகள்கூட நடந்திருக்கமாட்டேன். அதற்குள் ஒரு பெரிய கார் என்முன் வந்து நின்றது. தொடர்ந்தாற்போல 'அண்ணா' என்ற குரலும் 'அடே' என்ற குரலும் என்னை இழுத்தன.

காரிலிருந்து என் தங்கையும் மாமாவும் இறங்கினார்கள்.

"அண்ணா, அண்ணா!" என்று தங்கை என்னைக் கட்டிக் கொண்டாள்.

மாமா ஒன்றும் பேசாமல் நின்றார். அவர் கண்களிலிருந்து நீர் பெருகியது. அவர் உருக்கமாக, "அப்பா, போனதை மறந்து விடு. தெரியாத்தனமாக உங்களைச் சந்தே

கித்து விட்டேன். அதே காரணத்தால் உன் அம்மா காலமாகி விட்டாள். அவள் இறந்த பாவம் என்னையே சாரும்! அந்தப் பாவம் என்னைவிட்டு நீங்குவதற்காக நான் காசி யாத்திரை போகப் போகிறேன். பழையபடி நீங்கள் எல்லாரும் ஒரே குடும்பமாக இருங்கள்!'' என்று சொன்னார்.

அவர் பேச்சு எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்புறம் அவரோடு பேசியதில், கமலாவின் வளை கிடைத்துவிட்டது என்று தெரிந்தது. அதை யாரோ விற்கப் போன இடத்தில் மாட்டிக் கொண்டார்கள். வளைகிடைத்ததும் மாமாவே நேரில் போய் ஹமுவை அழைத்து வந்திருக்கிறார்.

நாங்கள் மூவருமாகக் புறப்பட்டு வீடு வந்து சேர்ந்தோம். மாமா காசிப் பயணத்தை நிறுத்தவில்லை.

அபாயச்சங்கு

'நீலம்'

7

அந்த விருந்தாளியைக் கண்டால் மாமாவுக்குக் கட்டோடு பிடிக்காது என்று மாமி கூறினள். "எப்படிடா வாசல் படி தாண்டி வருபவனை வர வேண்டாம் என்று விரட்டி அடிப்பது? அதனல் மாமா தர்ம சங்கடப்படுகிருர்!" என்று மாமி மேலும் கூறினள். எல்லாவற்றையும் நன்ருகக் கேட்டுக் கொண்டான் அபாயச் சங்கு.

சோம்பேறிச் சோமு உள்ளே வந்து தன் பெட்டியைக் கூடத்தில் வைத்தான். "சுந்தரவதனம் எங்கே?" என்று வெகு தடபுடலாக, அதிகார தோரணையில் விசாரித்தான். "எனக்கு இன்னும் ஒரு வாரம் இங்கே தங்கவேண்டிய ஜோலி இருக்கு. தங்குவதற்கு இங்கே தான் கொஞ்சம் சௌகரியமாய் இருக்கும். உங்களைப்போல வேறே மனிதர்கள் கிடைப்பார்களோ? என்ன அம்பி!" என்று வழக்கம்போல், புருடா விட்டான். மாமியோ முணு முணுத்துக்கொண்டே உள்ளே போனள். அபாயச் சங்கு இதைக் கவனித்தான். சோமு காதிலும் இந்த முணு முணுப்பு விழுந்தது. ஆனல் அவன் அதைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை.

அப்போது 615-ஆம் நம்பர் அங்கே வந்தான். "இன்ஸ்பெக்டர் எசமான் நாளை மறுதினம் காலைதான் திரும்புவார். அவசரமாக டெபுடி சூப்பிரண்டெண்டு ஐயாவுடன் கேஸ் விஷயமாக வெளியூர் போகிருர்" என்று தகவல் சொன்ணன்.

சோமுவைக் கண்டு ரோஸ் வாய் ஓயாமல் குரைத்துக் கொண்டிருந்தது. "சூ! சூ!" என்று அபாயச் சங்கு சோமு கவனிக்காதிருந்த சமயத்தில் ரோஸைக் கிளப்பிவிட்டான்.

"இது ஏது இந்தப் புது சனியன்? இதை வேறு வாங்கிக் கட்டியிருக்கிருனே' அழகு தான்" என்று மாமாவைப் பரிகாசம் பண்ணினன் சோமு. மாமிக்கு எரிச்சலாயிருந்தது. இதையும் அபாயச் சங்கு தெரிந்துகொண்டான்.

அபாயச் சங்கு, சோமுவைக் கிண்டலாகப் பார்ப்பதும், பேசுவதும் மாமிக்குத் திருபதியாகத் தான் இருந்தன. ஆனல் மேலுக்காக அவரிடம் வாய்கொடுக்காமல் சும்மா இருக்கும்படி மாமி சொன்னள். அன்று இரவு சாப்பாடு முடிந்து எல்லாரும் படுத்துக்கொண்டார்கள். ரோஸை அவிழ்த்து விட்டான் சங்கு. அது சோமுவைத் தூங்கவே விடவில்லை!

மறுநாள் காலை அபாயச் சங்கு பள்ளிக்கூடம் போய் விட்டு வந்தான். பள்ளிக்கூடத்திலும் அவனுக்குச் சோமுவை விரட்டுவது எப்படி என்ற ஞாபகமாகவே இருந்தது.

'வந்தது முதற்கொண்டு மாமாவும் மாமியும் மனவருத்தப்படும்படியே நாம் எல்லாம் செய்திருக்கிறோம். இனி அவர்களைச் சந்தோஷப்படுத்த ஏதாவது ஒன்றிரண்டு செய்து திருப்தி பண்ண வேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டான் அவன்.

பள்ளிக்கூடத்திலிருந்து ஒரு சாக்பீஸை எடுத்துக் கொண்டான். சோமு வெளியில் எங்கேயோ போயிருந்தார். நல்லதாகப் போயிற்று.

ஒரு ஸ்டூலை எடுத்துப் போட்டுக்கொண்டு வாசற்படி நிலையின்மீது, "விருந்தும் மருந்தும் மூன்று நாள்" என்று கொட்டை கொட்டையாகப் பளிச்சென்று எழுதி வைத்தான்.

வீடு திரும்பிய சோமு இதைக் கவனிக்கிறாரா, இல்லையா என்று கவனித்துக்கொண்டிருந்தான். அவர் அதைப் பார்ப்பதாகத் தெரியவில்லை. அன்றைப் பொழுதும் போயிற்று. மறுநாள் காலை அவன் சோமுவைப் பார்த்து, 'மாமா மாமா, அதோ எழுதியிருக்கே அதன் அர்த்தம் என்ன, மாமா?" என்று நிலைப்படியில் எழுதியிருந்த எழுத்துக்களைச் சுட்டிக் காட்டினான். இதற்கு முன்னதாக ரோஸையும் அவிழ்த்து விட்டான், அது சோமுவைத் துரத்தித் துரத்திக் கடிக்கச் சென்றது.

"ஓகோ! நான் இங்கே அடிக்கடி வறேன் என்பதற்காக இப்படியெல்லாம் செய்யும்படி அந்தப் பிரபு உனக்குச் சொல்லிக் கொடுத்தானோ! வரவேண்டாம் என்றால் இந்தக் குப்பை மேட்டில் நான் ஏண்டா காலடி வைக்கிறேன்? சரி, சரி. இனி அரை க்ஷணம்கூட இங்கே இருக்க லாயக்கில்லை" என்று தன் பெட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான் சோமு. ரோஸ் அவனைத் துரத்தியது. அபாயச்சங்கைப் பார்த்து, "ஏய்



சைக்கிள் சவாரி செய்யும் ரிக்ஷாக்காரன்:

ஐயா, ஓரம், ஓரம்!

அசத்து! இனிமே உங்க மூஞ்சிலே முழிக்கிறதில்லேன்னு உங்க மாமா தர்மப் பிரபுவிடம் சொல்லு!" என்று பொரிந்து தள்ளி, துள்ளி நடந்தான் சோமு

அபாயச் சங்கு கேலி கலந்தபடி கழுத்தை ஒரு வெட்டு வெட்டி வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தான். ரோஸ் போட்ட சத்தத்தில் சோமு விழுந்தடித்து வெளியேறினர்.

மாமிக்கு உள்ளூறச் சந்தோஷமாய்த்தான் இருந்தது. சோமு வெளியே நடந்துகொண்டிருப்பதற்கும் வெளியூர் போயிருந்த சுந்தரவதனம் எதிரே வருவதற்கும் சரியாக இருந்தது.

"அப்பா, சுந்தரவதனம்! எனக்கு அவமானம் தாங்கவில்லையடா! இதைவிட என்னை அடிக்கவே கூட அடித்து விடலாம்டா! உன் மருமான் என்னைப் படுத்தி வச்ச பாடு!" என்று சோமு எகிறிக் குதித்து அபாயச் சங்கைப் பற்றிப் புகார் செய்தான். சுந்தரவதனம் பேசாமல் உள்ளே போனர். நடந்த விஷயம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள எண்ணினர். ஆனல் அங்கே அபாயச் சங்கைக் காணேம். ஒருகால் மாமா தன்னை எங்கேயாவது புடைத்து விடுவாரோ என்று எண்ணி, ரோஸைக் குளிப்பாட்டும் பாவனையில் அவன் கொல்லைப் புறமாக ஓடி ஒளிந்துகொண்டு விட்டான். இதற்குள் சோமு திரும்பிக்கூடப் பார்க்காமல் நடையைக் கட்டிவிட்டான்.

"பையன் விஷமங்களில் பல னுள்ள விஷமங்களும் கலந்திருக்கின்றனவே!" என்று மாமா மாமியிடம் சொல்லிச் சந்தோஷப் பட்டுக்கொண்டார்.

மாமியும் மாமாவும் உள்ளே அபாயச் சங்கு எப்படிச் சாமர்த்தியமாகத் தண்டச் சோற்றுத் தடியனைத் துரத்தினன் என்பது பற்றிச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

மாமா கலகலப்பாக உள்ளே பேசிக்கொண்டிருந்ததால், ரோஸை ஒரு கையில் பிடித்து இழுத்துக்கொண்டு மெதுவாக அவன் வீட்டு ஹாலுக்குள் வந்தான். சுந்தரவதனம் அவனைக் கூப்பிட்டார். "ஏய், இந்த விஷயத்திலே நீ ஊதின சங்குதாண்டா கொஞ்சம் நன்மையாயிருக்கு. இருந்தாலும் இனிமேல் நீ இந்த மாதிரியாகப் பெரியவாளைப் பற்றி, மட்டு மரியாதை இல்லாமல் காரியங்களைச் செய்யப்

படாது!'' என்று அபாயச் சங்கைக் கண்டித்து வைத்தார்.

மாமாவின் மனத்திருப்தி, அவர் கண்டித்த முறையிலிருந்து நுட்பமாகத் தெரிந்துவிட்டது மருமகனுக்கு.

சுந்தரவதனத்தை இரண்டு நாளாகக் கண்ணில் காணுதிருந்த ரோஸ், தன்னை மறந்து துள்ளிக் குதித்தது. ஓலை வெடி மாதிரி நீண்டிருந்த தன் வாலைச் சுழற்றுச் சுழற்றென்று சுழற்றி ஆட்டிற்று. அது மாமா மடிமீது தாவி உட்கார்ந்து அவர் முகத்தைத் தன் நாக்கினுல் நக்கி ருசியும் பார்த்தது! மாமா மடியிலிருந்தபடியே அபாயச் சங்கைப் பார்த்துப் பார்த்து அது இன்ப ஊளையிட்டது. அவ்வளவு தூரம் அதை அவன்



ரொட்டியாலும் பாலாலும் திருப்தி செய்து வைத்திருந்தான்! தனக்குக் கொடுக்கும் ஆகாரங்களையெல்லாம் கூட அவன் அதற்குக் கொடுத்துக் கொழுக்க வைத்துவிட்டான். ஆகவே ரோஸ், ஒரு வருஷம் பூர்த்தியாவதற்குள்ளாகவே செழிப்பான ஒரு கன்றுக்குட்டி மாதிரி வளர்ந்து விட்டது!

வேண்டா விருந்தாளியை எப்படியோ வெகு சுலபமாக வெளியேறச் செய்த அபாயச் சங்கு பற்றி மாமாவுக்கும் மாமிக்கும் ஏற்பட்ட மனமகிழ்ச்சி சொல்லி முடியாது. ஆகவே ஏற்கனவே பாகவதர் தெரிவித்த புகார்களைப் பற்றியோ அதற்கடுத்தபடியாக அபாயச் சங்கு மளிகைக் கடையில் அடித்து வைத்த லூட்டி பற்றியோ சுந்தரவதனம் ஒன்றும் பாராட்டாமல், மருமகனைப் பொதுப்படையாக மட்டும் பயமுறுத்தி வைத்தார்.

மறுதினம் பகலில், மாமா உள்ளே சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அபாயச் சங்கும் மிகுந்த பயபக்தியுடன் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். நான்கு வீடுகள் தள்ளியிருந்த கோதண்டம் அடிக்கடி மாமாவிடம் வந்து படிக்கப் பழைய பேப்பர் கேட்பார். அவர் ஒரு நொண்டி. வந்தால் உடனே போகமாட்டார். ஏதாவது தொண தொண வென்று சமயம் தெரியாமல் பேசவும் ஆரம்பித்து விடுவார். இதற்காக மாமா இவரை 'நொண்டிப் பழி' என்று வீட்டுக்குள் சொல்வதுண்டு.

அப்போது வாசல் கதவை யாரோ தட்டியது கேட்டது. அபாயச் சங்கைக் கூப்பிட்டு யார் என்று பார்க்கச் சொன்னார் மாமா. அவன் கதவைத் திறந்துவிட்டு, "மாமா! அந்த நொண்டிப் பழி மாமா வந்திருக்கார்!" என்று சாப்பிட்டுக் கொண்டிருந்த மாமா காதில் விழும்படி ரேழியிலிருந்தே உரக்கக் கத்திவிட்டான் அபாயச் சங்கு.

"ஐயோ! இந்தப் பையன் ஏன் இப்படி மானத்தை வாங்குகிறான்!" என்று தலையில் அடித்துக் கொண்டார் மாமா. அங்கே வந்த அபாயச் சங்கிடம், "எலே, என்னடா துடுக்கு இது?" என்று கண்டித்தார்.

இதற்குள் நொண்டிக் கோதண்டம், "அதனால் என்ன? அவன் என்ன கண்டான்? நான் அடிக்கடி வறேனேல்லியோ! இதற்காக நீங்கள் வீட்டில் அலுத்துக்கொண்டிருப்பீர்கள். 'கதவை வேறு யார் இடிக்கப் போகிறார்கள்? அந்த நொண்டிப் பழியாகத்தானிருக்கும்!' என்று சொல்லியிருப்பீர்கள். குழந்தையும் அதையே சொல்லுகிறான்" என்று வருத்தப்படாதவர் மாதிரி நொந்துகொண்டார்.

சுந்தரவதனத்துக்கு என்னவோ போலிருந்தது. இந்த வாயாடியினால் வரும் துன்பம் ஒன்று இரண்டாக இருந்தால் தானே?

(தொடரும்)

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

R. 401. ராமப்பன், P. K., மன்னார்குடி. 402. ராமன், M., மதுரை. 403. ராமசாமி, P., திருப்பத்தூர். 404. ராஜகோபாலன், N. K., நாமக்கல். 405. ரங்கநாயகி, R., ஜாம்ஷெட்பூர். 406. ராமசந்திரன், G., கரூர். 407. ராஜேஸ்வரி, V., மாயவரம். 408. ரத்னம், R. G., மதுரை. 409 ராமநாதன், பவானி. 410. ராஜமோஹன், K., பம்பாய்-19. 411. ராஜு, S., புதூர், திருச்சி. 412. ராமசாமி, A., ஈரோடு. 413. ராதாகிருஷ்ணன், S. K., சிங்காநல்லூர். 414. ராமநாதன், R.M., கொழும்பு. 415 ராஜாமணி, வாசகம், கொடுமுடி. 416. ராமசந்திரன், V., சென்னை-7. 417. ராதாநந்தினி S., ஆழ்வார் திருநகரி. 418. ராதாகிருஷ்ணன், E., பெங்களூர்-1. 419. ரங்கசாமி, V. K., வெள்ளாலூர். 420. ராஜசேகரன், L., கொச்சிக்கடை, சிலோன். 421. ராகவேந்திரன், K., சென்னை-5. 422. ராமசந்திரன், பத்மினி. S. V., ராசிபுரம், 423. ராமசந்திரன், G. S., கோபிசெட்டிப்பாளையம். 424. ராஜன், R. S., தாம்பரம். 425. ராமசந்திரன், R, கும்பகோணம். 426. ராமமூர்த்தி, ராஜம், V., மதுரை. 427. ருக்மிணி, அனந்தாச்சாரி, H., வடலூர். 428. ராஜகோபாலன், திருமூர்த்தி, V., முசிறி. 429. ராமமூர்த்தி, ஜயராமன், ராதாகிருஷ்ணன், T. K., குடியாத்தம். 430. ராஜலக்ஷ்மி, S., பெங்களூர். 431. ராமதாஸ், K., போடிநாயக்கனூர். 432. ராஜம்மா, V., பெங்களூர். 433. ராமமூர்த்தி, லக்ஷ்மணன், நித்தியானந்தன், K. R., வில்லிவாக்கம். 434. ராஜேஸ்வரி, ராஜேந்திரன், I., கொழும்பு. 435. ராஜகோபால், P., சென்னை-3. 436. ராமு, C. D., பெங்களூர். 437. ராஜன், V., தாரமங்கலம். 438. ராஜாம்பாள், L., நுகிகோடா, சிலோன். 439. ராஜகோபால், T., சென்னை-7. 441. ராஜேஸ்வரி, N., யாழ்ப்பாணம். 442. ரவீந்திரன், K., சிவகங்கை. 443. ரவீந்திரன், T., சிலோன். 444.

இங்கே கத்தரிக்கவும்

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..............................

(தேதி, மாதம், வருஷம்)

பிப். '53 கூபன் நெ:

ராமையா, S. S., சங்கரன் கோவில். 445. ராகவேந்திரராவ், N., தாம்பரம் கிழக்கு. 446. ராமநாதன், G. L., குருவாரெட்டியூர். 447. ராஜலக்ஷ்மி, S., நன்னிலம். 448. ரவிராஜன், சாந்தா, ஸவிதா, G., சென்னை-6. 449. ராஜு, S., சென்னை-14. 450. ராமையா, S. M., அர்ச்யோன், மலாயா. 451. ராஜேஸ்வரி, K. R., சென்னை-4. 452. ராஜலக்ஷ்மி, சரோஜா, கமலா, T. S., மதுரை. 453. ராமையா, M., சங்கரநயினார்கோவில். 454. ரங்கநாதன், இந்திரா, R., சேலம் டவுன். 455. ரஞ்ஜனி, சியாமளா, N., புதுடில்லி. 456. ரங்கநாதன், S., மன்னார்குடி. 643. சுப்பிரமணியன், R., கும்பகோணம்.

(S) 641. சமபத்குமார், N., சென்னை-4. 642. சரோஜா, S.,

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய இரண்டு மாதக் கூபன்களும் தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

துங்கபத்திரா அணை. 644. சண்முகம், K. S. குலவாணிகர்புரம். 645. சிவசுப்பிரமணியன், D. A., தேவகல்லூர். 646. சந்தானம், S., உடுமலைப்பேட்டை. 647. சங்கரலிங்கம், S., அம்பாசமுத்திரம். 648. சுந்தரேசன், கண்ணப்பா, மதகுப்பட்டி. 649. சுந்தரராஜன், ராஜு, M. B., செங்கல்பட்டு. 650. சதாசிவம், ஜாம்ஷெட்பூர். 651. சாந்தமூர்த்தி, R., காட்பாடி. 652. சுப்பிரமணியன், P. S., பாளையங்கோட்டை. 653. சுசீலாபாய், சரோஜா, பேபி, V., வடுகச்சேரி. 654. ராஜா, R.S.N., சென்னை-4. 655. சிவலிங்கம், R., மஞ்சன்தொடுவை. 656. சீனிவாசன், V. R., சென்னை-4. 657. சத்தியமூர்த்தி, K, புதுப்பாளையம், 658. சரஸ்வதி, P., தூத்துக்குடி. 659. சர்புதீன், A. M., ஈரோடு. 660. சடகோபன், லக்ஷ்மி, T. S., ஸ்ரீரங்கம். 661, சொர்ணவேலு, பாளையங்கோட்டை. 662. சங்கரராமன்.S., கரூர். 663. சுப்பராஜா, S. P., ராஜபாளையம். 664. சுவாமிநாதன், R. H, பம்பாய். 665. ஷாஜஹான், B., கொழும்பு-13. 666. சுலோசனா, சென்னை-18. 668. சகாதேவன், A., காட்பாடி. 669. சுப்பிரமணியன், ராஜன், V., சென்னை-5. 670. சீனிவாசமூர்த்தி, கணபதி, S., திருச்சி. 671. சண்முகசுந்தரம், S., கோயம்புத்தூர். 672. சிவக்கொழுந்து, R., புகளூர். 673. சுப்பிரமணியன், P., சென்னை-11. 674. சரளா, B., சென்னை-4. 675. சீரங்கம், S., சென்னை-4. 676. சங்கர், R. K., புதுடில்லி.

(மீதி அடுத்த இதழில்)

என் ஹாஸ்யம்

தெனாலிராமன்

ரெயில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. நானும் என் சகோதரி ரமாவும் புனாவிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தோம்.

ஜன்னல் வழியே வெளியே பார்த்துக்கொண்டிருந்த நான், ரமாவின் 'கணீர்'ச் சிரிப்பு என் காதில் பாய்ந்தவுடன் என் பார்வையை உள்ளே திருப்பினேன். "திடீரென்று எதை நினைத்துக் கொண்டாய்? சிரிப்பு எப்படி வந்தது? என் வந்தது?" என்று அவளைக் கேட்டேன்.

கையால் சுட்டிக் காண்பியாது, "என் எதிரே இரு மராட்டியர்கள் உட்கார்ந்திருக்கிறார்களே, அவர்கள் ஏதோ பேசிக்கொண்டார்கள். இடையில் ஒருவன் ஒரு துணுக்குச் சொன்னான். அது சுவாரஸ்யமாயிருந்தது. நான் சிரிக்கவேண்டாம் என்றுதான் இருந்தேன். ஆனால் அவன் சொன்ன விதம் என்னை அறியாமல் சிரிக்கச் செய்துவிட்டது" என்று சொல்லிவிட்டு எனக்கு அந்தத் துணுக்கைச் சொன்னாள். நானும் சிரித்தேன். சுமாராய்த்தான் இருந்தது. இருந்தாலும் அது என் மனசில் பதிந்துவிட்டது.

பம்பாய் வந்து சேர்ந்ததும் முதல் காரியமாக அந்தத் துணுக்கைச் சற்று விஸ்தாரமாக என் கைச் சரக்குடன் எழுதி 'ஹாஸ்ய தீபகம்' என்று தமிழ் நாட்டில் ஒளி வீசிக்கொண்டிருந்த ஒரு ஹாஸ்யப் பத்திரிகைக்கு அனுப்பி வைத்தேன். கூடவே அதன் அதிபருக்கு, "இது ஓர் அபூர்வமான துணுக்கு. இதுகாறும் தமிழ் நாட்டில் இது போன்ற துணுக்கு வெளியானதில்லை. இதைத் தங்கள் பத்திரிகையில் வெளியிட்டுத் தங்கள் பத்திரிகையின் கௌரவத்தை ஒரு படி உயர்த்திக்கொள்ளப் போகிறீர்கள். அதற்காக என்னை வாழ்த்தவும் போகிறீர்கள்" என்று ஒரு கடிதம் எழுதினேன்.



அந்தத் துணுக்கை எழுதி . .

'ஹாஸ்ய தீபக'த்தின் ஆசிரியர் ஒரு முட்டாள் போலிருக்கிறது. அவருக்கு ஹாஸ்ய ரஸனையே கிடையாதுபோலும்! பின்னே பாருங்களேன், என் துணுக்கு, 'போன மச்சானாய்'த் திரும்பி

வந்தது, 'ஆசிரியர் வருந்துகிறார்' என்ற பில்லையைத் தாங்கிக் கொண்டு. அவரை வைதேன். 'ஜன்ம ஜன்மேபி' அவருக்கும் சரி, அவர் பரம்பரைக்கும் சரி, ஹாஸ்ய ரஸனையே இல்லாது போகக்கடவது என்று சபித்தேன். அவர் ஹாஸ்யம் என்று நினைத்து ஏற்கனவே தம் பத்திரிகையில் எழுதியுள்ள ஹாஸ்யக் குப்பை களைத் தாறுமாறாக விமரிசனம் செய்தேன்.

அன்றே 'விநியோகம்' என்ற மற்றொரு பத்திரிகைக்கு அந்தத் துணுக்கை அனுப்பினேன். 'விநியோகம்' வெறும் ஹாஸ்யப் பத்திரிகை மட்டுமல்ல; கதம்பம்.

ஹாஸ்யம், சோகம், ஹாஸ்ய சோகம், சோக ஹாஸ்யம், முதி யோர் பக்கம், மாதர் பகுதி, கால பலன்-இப்படிப் பல விஷயங்களைத் தாங்கி வரும் ஒரு சிறந்த பத்திரிகை.

'விநியோகம்' ஆசிரியருக்குத்



கண்ணீர் பெருகியது..

துணுக்குடன் கீழ்க்காணும் கடித மும் தொடர்ந்து சென்றது:

"விநியோக ஆசிரியரே,

வணக்கம்.

இத்துடன் ஒரு ஹாஸ்யப் பொக்கிஷம் பொட்டலமாய் வருகி றது. தங்கள் பத்திரிகை அந்தத் துணுக்கைத் தன் இதழில் வெளியிடும் பெருமையை அடையப் போகிறது. என்னே பாக்கியம்! அதை நினைக்கின் நாம் இறும்பூது எய்துகிறோம்.

இதை முதலில் 'ஹாஸ்ய தீபகம்' என்ற ஒரு திராபைப் பத் திரிகைக்கு அனுப்பிவிட்டேன். 'ஐயோ! அதற்கு அனுப்பி விட்டோமே!' என்று ஏங்கினேன். நல்லவேளையாக அந்தப் பாபி ஆசிரியர்-பாவியல்ல; இப்போது புண்ணியவான் - அதைத் திருப்பி அனுப்பிவிட்டார். அவர் பத்திரிகை என் துணுக்கை வெளி யிடக் கொடுத்து வைக்கவில்லை! எப்படிக் கொடுத்து வைத்திருக்க முடியும், அது தங்கள் பத்திரிகை யில் பிரசுரமாக வேண்டும் என்று இருக்கையில்! போகட்டும், உங் கள் பத்திரிகைக்கு அந்தப் பாக்கி யம் கிடைத்துள்ளது. உங்களை நான் வாழ்த்துகிறேன். உங்கள் பத்திரிகை வாழ்க!

தங்கள்,

நவீன தெனாலிராமன்."

ஒரு நாள் பள்ளியிலிருந்து வீடு திரும்பியதும் எனக்கு ஒரு கடிதம் காத்திருந்தது. என் வீட்டா ரிடம், 'என் விலாசமிட்டு வரும் கடிதங்களை எக்காரணம் கொண் டும் பிரிக்க வேண்டாம்' என்று கண்டிப்பாக எச்சரித்திருந்தேன்.

ஆகையால் கவர் பிரிக்கப்படாமலே இருந்தது.

ஆவலை அடக்கிக்கொண்டு கவரைப் பிரிக்காமலே தபால் முத்திரையைக் கவனித்தேன். 'மதராஸ்' என்று கண்டிருந்தது.

'சரி, சரி. விநியோக ஆசிரியரிடமிருந்துதான் வந்திருக்கும். என்ன எழுதியிருக்கப்போகிறார்? "துணுக்குக் கிடைத்தது. அபாரம், அற்புதம்! தொடர்ந்து நம் பத்திரிகைக்குத் தவறாமல் எழுதுங்கள்" என்று என் தலையில் வெண்ணெய் வைக்கும் தினுசில் எழுதியிருப்பார்!' என்று எண்ணமிட்டவனாய், கடித உறையைப் பிரித்தேன்.

"விநியோகம்,
சென்னை
11-3—

ஹாஸ்ய எழுத்தாளர் ஸ்ரீ நவீன தெனாலிராமனுக்கு,

துணுக்குக் கிடைத்தது. அதை எங்கள் பத்திரிகைக்கு மனமுவந்து அனுப்பி வைத்ததற்கு மிக மிக நன்றி. ஆனால்....

நீங்கள் 'ஹாஸ்ய தீபக'த்தின் ஆசிரியர்தான் ஒரு பாவி என்று நினைத்திருப்பீர்கள். நானும் ஒரு 'மகாபாவி' தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையாக எங்கள் பத்திரிகையும் தங்கள் துணுக்கைப் பிரசுரிக்கக் கொடுத்து வைக்கவில்லை! அந்தத் துணுக்கை இப்படிப் பல பத்திரிகைகளுக்கு அனுப்பிச் சகல பத்திராதிபர்களையும் 'பாவி'களாக்கி விடாமலிருக்க நாங்கள் உங்கள் துணுக்கைப் 'பாவ மூட்டை'களைச்



துப்பைக் கூடையில் போட்டு..

சுமக்கும் எங்கள் காரியாலயக் குப்பைக் கூடையில் கிழித்தெறிந்து போட்டுவிட்டுப் புண்ணியம் தேடிக் கொண்டுள்ளோம்.

தங்கள் அன்பன்,
ஆதிமூலம்
(ஆசிரியருக்காக.)

கடிதத்தைப் படித்தேன். கண்ணீர் பெருகியது. ஐயோ! என் சிருஷ்டிக்கு இந்தக் கதியா நேர வேண்டும்? மகாபாவி! குப்பைக் கூடையில் கிழித்துப் போட்டுப் புண்ணியம் தேடிக்கொண்டானாமே! அவன் வாழ்வானா? அவன் அழிக! அவன் பத்திரிகை பாழ்த்துப் பட்டுப்போக!

முன்னம், விநியோகத்தைச் 'சிறந்த' பத்திரிகை என்றா சொன்னேன்? தப்பு, தப்பு! 'சீரழிந்த' பத்திரிகை என்று அதைத் திருத்திக்கொள்ளுங்கள்!

அவர்களைச் சொல்வதில் குற்றமில்லை. பாவம்! 'என் துணுக்கு உயர்தர குப்பைச் சேர்ந்தது. மட்டரகச் சரக்குகளையே படித்துப்

படித்து மூளை மழுங்கியிருக்கும் இந்த ஆசிரியர்களுக்கு இதன் மதிப்பு எங்கே தெரியப்போகிறது!' என்று அதை மறுபடியும் எழுதி 'விகடகவி' என்னும் ஹாஸ்ய சஞ்சிகைக்குத் தபால் செய்தேன். அத்துடன் எந்தவிதமான கடிதமும் இணைந்து செல்லவில்லை.

'விகடகவி' ஆசிரியர் 'நான் மாத்திரம் லேசுபட்டவனா? நானும் ஒரு காளவாய்ச் செங்கல்தான்!' என்னும் தினுசில் ஒரு கடிதத்துடன் அதைத் திருப்பியிருந்தார்.

திடீரென்று ஒரு நாள், 'துணுக்குடன் அதை விளக்க ஒரு கேலிச் சித்திரம் வரைந்து அனுப்பினால் என்ன? அப்போது எந்தப் பத்திரிகையிலும் தயங்காது பிரசுரிப்பார்கள்' என்ற எண்ணம் உதயமாயிற்று.

அன்றே என் சித்திரகார நண்பன் சீதக்காதியை அணுகி என் துணுக்குக்கு ஒரு சித்திரம் போட்டுத் தர வேண்டினேன். அவன் முதலில் மறுத்தான். ஆனால் வரும் சம்மானத்தில் மூன்றில் ஒரு பங்கு தருவதாகச் சொன்னதும் ஒரு சித்திரம் வரைந்து கொடுத்தான். என் துணுக்கை அந்தக் கேலிச் சித்திரத்துடன் அதே சூட்டோடு சூடாக, 'சித்திர ரகளை' என்ற வாரப் பதிப்புக்கு அனுப்பினேன்.

நெற்றியில் கட்டுடனும் முழங்காலில் ரத்தத்துடனும் விளையாடும் இடத்திலிருந்து திரும்பி வீட்டிற்குள் காலடி வைத்தவுடன், "அண்ணா! இன்றைக்கு உனக்கு ஒரு கடுதாசும் பத்திரிகையும் வந்தது. கூட முப்பது ரூபாய்க்கு ஒரு செக்கும் இருக்கு!" என்று சொல்லிக் கடிதத்தைக் கொடுத்தாள்.

சித்திர ரகளை ஆசிரியர் 'சித்திரக்குள்ளன்', "தங்கள் துணுக்கும் கேலிச் சித்திரமும் கிடைத்தன. துணுக்கு மகா மோசம். ஆனால்கூட அனுப்பியிருந்த கேலிச் சித்திரம் நன்றாக இருந்தது. அதை வேறு துணுக்குக்கு உபயோகித்துக் கொண்டுள்ளோம். தங்களுக்கு என் நன்றி. தங்கள் சித்திரத்துக்குச் சம்மானமாக ரூபாய் முப்பதுக்குச் 'செக்' ஒன்று அனுப்பியிருக்கிறேன். தனித் தபாலில் தங்கள் சித்திரம் வெளியாகியுள்ள 'சித்திர ரகளை'யையும் அனுப்பியுள்ளேன். இன்னும் இம்மாதிரி சித்திரம் வரைந்தால் எங்களுக்கு அனுப்புங்கள்" என்று எழுதியிருந்தார்.

'செக்'கைப் பையில் போட்டுக் கொண்டு கடிதத்தை உறையோடு நாலு சுக்கல்களாகக் கிழித்தெறிந்தேன்,

'நாசகாரா!' என்று சித்திர ரகளை ஆசிரியரை நாலு முறை திட்டினேன்.

சீதக்காதியை அணுகி..

எனக்கு ஆத்திரம் பொங்கி வந்தது. அவமானமாக இருந்தது. "என் கடிதத்தைப் பிரித்தாய்?" என்று ரமாவை வைதேன்.

என் ஹாஸ்யத் துணுக்கை எப்படியும் அச்சு வாகனத்தில் ஏற்றி விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டேன்.

மறுதினம் என் துணுக்கை எழுதி, 'புன்னகை' என்று புதிதாகக் கிளம்பித் தமிழ்நாட்டில் 'ஹாஸ்யப் புன்னகை' புரிந்து கொண்டிருந்த ஒரு மாசிகைக்கு அனுப்பி வைத்தேன். கூடவே துணுக்கு என் தலையில் சம்பவித்த விதத்தையும் அதைப் பல்வேறு பத்திரிகைகளுக்கு அனுப்பி, நான் பெற்ற பலவிதமான பதில்களையும் விஸ்தாரமாக நாலைந்து பக்கங்களில் எழுதி, "தாங்கள் இதை எப்படியும் தங்கள் 'புன்னகை'யில் பிரசுரித்து விடவேண்டும். சம்மானம் எதுவும் வேண்டாம்" என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டு என் இள உள்ளத்தின் புலம்பலைக் கொட்டி, 'புன்னகை' ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

புன்னகை ஆசிரியர் பதிலுக்காக, 'வருமீன் வருமளவும் வாடி நிற்கும் கொக்காய்' காத்திருந்த எனக்கு ஒரு நாள் அவரிடமிருந்து ஒரு கடிதமும் புன்னகைப் பத்திரிகைப் பிரதியொன்றும் வந்தன. அவர் கடிதத்தைப் பிரித்துப் படிக்குமுன், மாசிகையைப் புரட்டினேன். என் துணுக்கைக் காணோம். துணுக்குற்றேன்! ஆனால் நான் 'புன்னகை' ஆசிரியருக்கு எழுதியிருந்த கடிதம், 'இளவலின் அநுபவம்' என்னும் தலைப்பில் பிரசுரமாகியிருந்தது.

ஆசிரியர், தலைப்பின் பக்கத்தில் ஒரு குறிப்பு எழுதியிருந்தார்: 'இந்தக் கதாசிரியர் உளம் உருகும்படி, ஆனால் ஹாஸ்யரஸம் குன்றாதபடி தம் துணுக்கு ஒன்றைப் பிரசுரம் செய்யத் தாம் எடுத்துக் கொண்ட சிரமங்களை விரிவாகச் சொல்கிறார். நான் மிக ரஸித்தேன். நீங்களுந்தான் ரஸியுங்களேன்.'

எனக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. கடித உறையைப் பிரித்தேன். அதில் கடிதம் எதுவுமில்லை. பத்து ரூபாய்க்கு ஒரு 'செக்'கும் என் ஹாஸ்யத் துணுக்கும் இருந்தன. என் துணுக்கைப் பார்த்தேன். "நீ என்ன அவ்வளவு பாவம் செய்து விட்டாய், அச்சு வாகனத்தில் ஏற முடியாத படிக்கு!" என்று பச்சாத்தாபம் மிகக் கொண்டவனாய் அந்தத் துணுக்கை நான் படித்துப் பார்த்தேன்.

ஐயோ! பத்திரிகாசிரியர்களைக் குறை கூறி என்ன பிரயோஜனம்? எனக்கே என் துணுக்கு நன்றாக இல்லை!

'போகிறது, ஒரு ஐந்து வரித் துணுக்கு, நாற்பது ரூபாய் சம்பாதித்துத் தந்ததே!' என்ற ஒரு சந்தோஷம் போதும். என் ஹாஸ்யத் துணுக்கு பிரசுரமாகியிருந்தால் எனக்குச் சம்பாவனையாக ஐந்து ரூபாய்கூடக் கிடைத்திருக்குமோ, என்னவோ!

புலிக்குட்டி

'அமா'

நான் ஒரு புலிக்குட்டி. இன்னும் எனக்கு இரண்டு வயது நிரம்பவில்லை. நான் பிறந்தபொழுது எனக்கு ஓர் அண்ணனும் ஒரு தங்கையும் இருந்தார்கள். எங்கள் மூன்று பேரையும் என் தாய் பதினைந்து வாரம் சுமந்து பெற்றாள். நான் பிறக்கும்போது என் கண் திறவாமல் பிறந்தேன். மேலெல்லாம் சடை நாயைப்போல் மென்மையான மயிர் வரி எல்லாம் நெருக்கமாக இருந்தது. என் தாய் எனக்கு இரண்டு மாதம் வரையில் பால் கொடுத்து வளர்த்தாள்.

நாங்கள் நான்கு பேருமாக மிகவும் ரகசியமாக வாழ்ந்தோம். எங்கள் தாய் எங்களை வெளியே போக விடவே மாட்டாள். நாங்கள் இருந்த இடம் ஒரு குகை. அதைச் சுற்றி அடர்ந்த புதர்கள். குகையிலிருந்து வெளியே போகும்போது என் தாய் வெகு ஜாக்கிரதையாக நாலு பக்கமும் பார்த்துவிட்டே போவாள். திரும்பி எங்களிடம் வரும்பொழுதும் அப்படியே.

ஒரு நாள் என் அம்மா வெளியே போயிருக்கும்போது என்னுடைய அண்ணனும் தங்கையும் தனியாக வெளியே போகப் புறப்பட்

டார்கள். என்னையும் கூப்பிட்டார்கள். "எனக்குப் பயமாக இருக்கிறது. மேலும் அம்மா கோபிப்பாள். நீங்களும் போகவேண்டாம்" என்றேன். அவர்கள் கேட்கவில்லை. என்னை விட்டு விட்டு அவர்கள் போனார்கள். அதற்குப் பிறகு நான் காணவே இல்லை.

அன்று என் அம்மா அவர்களை எங்கும் தேடினாள்; காணவே இல்லை. அவள் வருத்தத்தோடு திரும்பி வந்தாள். "உன் அண்ணன் தங்கை இருவரையும் உன் அப்பா கொன்றுவிட்டார். இப்பொழுது எனக்கு நீ ஒருவன்தான் குழந்தையாய் இருக்கிறாய்" என்று கண்ணில் நீர் ததும்பச் சொல்லி, என்னை அணைத்துக் கொஞ்சினாள்.

நான் பிறந்தபின் இப்படி மூன்று மாதங்கள் சென்றன. பின்பு, என் அம்மா சில வேளைகளில் என்னையும் தன்னோடு அழைத்துச் செல்வாள். ஒரு நாள் யாரோ ஒருவர் திடீரென்று எங்கள் முன்னால் வந்து நின்றார். சட்டென்று என் அம்மா என்னை அணைத்துக்கொண்டாள். அப்பொழுது அவர், "இவன்தான் நம்முடைய குழந்தையா?" என்றார். அவர்தான் என் அப்பா என்று தெரிந்துகொண்டேன். அவரும் என்னோடு விளையாடினார்.

ஆனால் என் அம்மாவுக்கு அது பிடிக்கவில்லை. அவரால் எனக்கு ஏதாவது நேர்ந்துவிடுமோ என்று எச்சரிக்கையாகவே இருந்தாள். நாங்கள் மூன்று பேரும் பல தடவைகளில் ஒன்றாக உலாவப் போவோம். அப்பொழுது எல்லாம் என் அப்பாவுக்கும் எனக்கும் நடுவே என் அம்மா நடந்து வருவாள்.

ஒரு நாள் நிலவு காயும் இரவில் அவர்கள் மான் வேட்டைக்குப் புறப்பட்டார்கள். 'நீயும் வா' என்று என் அப்பா என்னை அழைத்தார். நானும் சென்றேன். தூரத்தில் மான்கள் மேய்ந்துகொண்டிருந்தன. அங்கிருந்து காற்று எங்கள் பக்கமாக வீசிக்கொண்டிருந்தது. மான்களின் வாசனை என் மூக்கில் பட்டது. அதனால்



என் அப்பாவுக்கு நல்ல பசி. அவருக்குக் கோபம் வந்துவிட்டது, அவருடைய கண்ணில் தீப்பொறி பறந்தது. என் பக்கமாகத் துள்ளி, என்னைப் பளீரென்று ஓர் அறை அறைந்தார். வலி தாங்க முடியாமல், நான் கீச்சென்று கத்தினேன்.

என் அப்பா நல்ல உயரம். கிட்டத்தட்ட நாலடி இருக்கும். மூக்கு நுனி முதல் வால் நுனிவரையில் ஒன்பது அடி நீளம். அவர் நல்ல பலசாலி. என் அம்மா அவரை விட அளவில் சிறியவள். அவ்வளவு பலசாலியும் இல்லை. ஆனாலும், அவள் ஒன்றையும் கவனியாமல், என் தகப்பனாரின் மேல் பாய்ந்தாள். அவர் தோளில் பலமாகக் கடித்தாள். என்னுடைய தாயின் அன்பை அப்பொழுது தான் தெரிந்துகொண்டேன். அப்பொழுது அவள் பிடித்த பிடியை விட்டிருந்தால் எங்கள் இரண்டு பேர் கதியும் அதோ கதிதான். அதைத் தெரிந்து, அவள் இன்னும் பலமாகக் கடிக்கவே, என் அப்பா வலி தாங்க முடியாமல் கத்தினார். இதற்குள் நான் ஓடிப் போய் விட்டேன். என் அப்பா அடித்த போது என் உடலில் உண்டான புண் நெருப்புச் சுட்டது போல் காந்திற்று. அருகிலுள்ள ஓடையில் படுத்துக்கொண்டேன். தன்னை விட்டுவிட்டால் போதும் என்றமாதிரி அப்பா கத்தவே அம்மா கடிப்பதை விட்டாள். என் அப்பா

எனக்கு உற்சாகம் உண்டாயிற்று.

என் அப்பா, "நீ இங்கேயே இரு. சிறிது கூட ஓசைப்படுத்தாதே" என்று சொல்லிவிட்டு, பதுங்கிப் பதுங்கி, ஓசையே இல்லாதபடி, மான்களை நோக்கிச் சென்றார். அந்த மான்களை அருகில் போய் பார்க்கவேண்டும் என்ற ஆசையில் பரபரப்பாக நான் இரண்டடி எடுத்துவைத்தேன். கீழேயிருந்த ஓர் உலர்ந்த குச்சி பட்டென்று முறிந்தது. அந்த ஓசையைக் கேட்டுச் சில மான்கள் எங்கள் பக்கமாக வெறித்துப் பார்த்தன. என் அப்பாவும் அம்மாவும் பதுங்கி வருவதைக் கண்டன. எல்லா மான்களும் ஒரே ஓட்டமாக ஓடிக் காட்டுக்குள் மறைந்து விட்டன.

வேறொரு பக்கமாக ஓடிப் போய்விட்டார். அதற்குப் பிறகு அவரை நான் காணவே இல்லை.

என் தாய் என் அருகில் ஓடி வந்து, என் புண்ணைத் தன் நாவால் நக்கினாள். அன்று நாங்கள் இருவரும் தவளைகளைப் பிடித்துத் தின்றோம். வெகு சீக்கிரம் என் புண் ஆறிவிட்டது.

அதன் பின்பு அவளே எனக்கு எல்லாம் கற்றுக் கொடுத்தாள். உலர்ந்த சருகுகள் கிடக்கும் இடத்திலும் ஓசை இல்லாமல் நடக்கவும், புதர்களுக்கு இடையே கண்ணில் படாமல் பதுங்கிச் செல்லவும் நான் மெல்லக் கற்றுக் கொண்டேன்.

ஒரு சமயம் நாங்கள் உலாவிக்கொண் டிருந்தபோது ஓரிடத்தில் மயில் கூட்டம் ஒன்று இருந்தது. என் அம்மா என்னை மெதுவாகத் தொட்டு, "பிடி பார்ப்போம்!" என்றாள். எனக்கு மயிலைக் கண்டு பயமாய் இருந்தது. அதன் மூக்கையும், தலையில் உள்ள கொண்டையையும், ஆயிரம் கண்ணுள்ள வால் தோகையையும் பார்த்து நான் நடுங்கிப் போனேன். ஆனால் அம்மா எனக்கு ஏதாவது ஆபத்து வந்தால் காப்பாற்றுவாள் என்ற மன உறுதியோடு, மெதுவாகப் பதுங்கிப் போனேன். பாய்ந்தேன். ஆனால், என்னுடைய பயத்தில் என் குறி சற்றே தப்பிவிட்டது. மயிலின் தோகையிலுள்ள சில இறகுகளே என் கையில் அகப்பட்டன. மயில்கள் எல்லாம் சட்டென்று பறந்து போய் விட்டன. அப்பொழுது என் தாய் என்னைக் கோபித்துக் கொள்ளவில்லை. என்மேல் அவளுக்கு அத்தனை அன்பு!

பிறகு, "என்னை மான் என்று நினைத்துக் கொள்; என்னைப் பிடி பார்ப்போம். என்னை மயில் என்று நினைத்துக்கொள்; என்னைக் கடி பார்ப்போம்" என்று அடிக்கடி சொல்லி, விளையாட்டாக எனக்கு வேட்டையாடக் கற்றுக் கொடுத்தாள். கொஞ்சம் கொஞ்சமாக எப்படிப் பாய்வது, எப்படிப் பிடிப்பது, எப்படிக் கடிப்பது, புதர்களில் எப்படி மெதுவாகச் செல்வது என்றெல்லாம் தெரிந்துகொண்டேன்.

எனக்கு ஒரு வயதானபோது பல் விழுந்து முளைக்கத்

தொடங்கிவிட்டது. பிறகு அவள் என்னை நிஜமாகவே வேட்டைக்கு அழைத்துச் செல்வாள். ஆடுகளையும் மான் குட்டிகளையும் நான் பிடிக்கும்படி என் பக்கமாகத் துரத்துவாள். நான் அவைகளைப் பிடித்துக் கொன்றுவிட்டால், என்னைப் பாராட்டுவாள். இப்படி வேறு யார் சொல்லிக் கொடுப்பார்கள்?

கொன்ற மிருகங்களை எப்படித் தின்பது என்பதை நானாகவே தெரிந்து கொண்டேன். சில வேளைகளில் கொம்பையும் குளம்பையும் கடித்து, என் பல் வலித்தது உண்டு. என் வாய் புண் ஆனதும் உண்டு. இப்பொழுது மிருதுவான இடம் எது என்று தெரிந்து கடித்துத் தின்னக் கற்றுக்கொண்டு விட்டேன்.

எனக்கு அப்பொழுது யானையைக் கண்டால் பயம்; காட்டுப் பன்றியைக் கண்டால் பயம்; தண்ணீரைக் கண்டால் பயம். என் அம்மாவுக்குக்கூட யானையைக் கண்டு சற்றே பயம்தான். ஒரு நாள் ஒரு யானைக் கூட்டம் எங்கள் பின்புறமாக வரக் கண்டோம். முன் பக்கத்தில் ஓர் ஓடை இருந்தது. என் அம்மா அதில் இறங்கி, அக்கரை சென்று, என்னை மெதுவாக அழைத்தாள். நான் தயங்கி நின்றேன்.

அவள் மறுபடியும் என் பக்கமாக வந்து என்னை மெதுவாக ஓடையில் தள்ளினாள். நான் ஓடையில் மூழ்கிவிடுவேன்போல் இருந்தது. பயத்தில் என் கையை அகற்றி மாறி மாறி இரண்டு கையாலும் தண்ணீரை ஓங்கி அறைந்தேன். என்ன ஆச்சரியம்! தண்ணீரில் மூழ்குவதற்குப் பதிலாக, நான் மிதந்து முன் செல்லத் தொடங்கிவிட்டேன். "நீ நன்றாக நீந்துகிறாயே!" என்று என் அம்மா சொன்னாள். நாங்கள் எதிர்க் கரை போய்ச் சேர்ந்தோம். அதற்குப் பிறகு, எனக்குத் தண்ணீரைக் கண்டு பயமே இல்லை.

ஒரு நாள் நாங்கள் உலாவும் பொழுது பட பட வென்று மான் குளம்பு ஓசை கேட்டது. ஆனால், வந்தது மான் இல்லை. பெரிய காட்டுப் பன்றி. அதன் கோரப் பற்கள் நீளமாகக் கத்திபோல் பள பள என்று மின்னின. அப்பொழுது எனக்கு வயது பதினாறு மாதம். எனக்கு முதலில் நெஞ்சு பகீரென்றது. திரும்பி ஓடிவிடலாம் என்று எண்ணினேன். அதற்குள் அந்தப் பன்றி என்னை நோக்கி ஒரே வேகமாகக் கண்ணை மூடிக்கொண்டு கிடு கிடுவென்று ஓடி வந்தது.

நான் புலிக் குட்டி அல்லவா? எனக்குக் கோபம் வந்து விட்டது. முன்பின்யோசியாமல் சட்டென்று துள்ளி, அதன் பிடரிப் புறமாகக் கடித்தேன். வாய் நிறையக் குச்சி போன்ற மயிர் அகப்பட்டது. சரியாகக் கடிக்க முடியவில்லை. 'நான் தொலைந்தேன்' என்று நினைத்தேன்.

ஒரு நொடியில் என் நிலையை என் தாய் அறிந்து கொண்டாள். சட்டென்று அவளும் பன்றியின் மேல் பாய்ந்தாள். அந்த அதிர்ச்சியால் பன்றிக்குத்

தலை கிறு கிறுத்தது. எங்களை உதறிவிட்டு ஒரு வட்டம் சுற்றிற்று. நாங்கள் இருவரும் உருண்டு விழுந்தோம். ஆனால், அது மறுபடியும் எங்களை நோக்கிப் பாய வந்தபொழுது நாங்கள் இருவரும் தயாராக இருந்தோம். அது கிட்ட வந்ததும் சட்டென்று விலகினோம். ஆளுக்கு ஒரு புறமாக அதைக் கடித்தோம். பன்றி உருண்டு விழுந்தது. அது எழுந்திருப்பதற்குள் என் தாய் அதன் குரல்வளையைக் கடித்துக் கிழித்தாள். பன்றி செத்தது. ஆனாலும், இப்பொழுதும் காட்டுப் பன்றியைக் கண்டால் எனக்குச் சற்றே பயமாகத்தான் இருக்கிறது. என் மாமனை ஒரு காட்டுப் பன்றி கொன்றுவிட்டதாம்.

ஒருநாள் தடதட வென்று ஓசை கேட்டது. காட்டு யானைகள் கூட்டமாக விரைந்து சென்றன. மான்கள் வெகு வேகமாக ஓடின. காட்டு எருமைகளும் நரிகளும் வேறு சில மிருகங்களும் ஓடின. குரங்குகள் கிளைக்குக் கிளை தாவிச் சென்றன. புறாக்கள், கிளிகள், காட்டுக் கோழிகள், மயில்கள் முதலிய பறவைகளும் கத்திகொண்டே பறந்து சென்றன. இரண்டொரு சிறுத்தைகளும் ஓடக் கண்டோம். நாங்களும் என்னவோ ஏதோவென்று அச்சத்துடன் அவைகளோடு ஓடினோம்.

அங்கே ஓரிடத்தில் அகன்ற புல்வெளி இருந்தது. அங்குள்ள கோரைப்புற்கள் எங்களை விட உயரமாக வளர்ந்திருந்தன. அவற்றினுள் நுழைந்து சென்றோம். அப்பொழுது யானைகளின் மேல் சில மனிதர்கள் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் கையிலிருந்த துப்பாக்கி 'டப், டப்' என்று நெருப்பைக் கக்கிற்று. இரண்டு சிறுத்தைகள் சுருண்டு விழுந்தன. உடனே என் தாய் என்னை நோக்கி, "என்னோடு வா. முதல் யானையின் மேல் உள்ளவனை நான் பயமுறுத்துகிறேன். அந்தச் சமயத்தில் நீ எதிர்ப் பக்கத்துக் காட்டுக்குள் ஓடிப் போய் விடு" என்றாள்.

அவள் உறுமிக் கொண்டே சட்டென்று முதல் யானையின் மேல் பாய்ந்தாள். எல்லா யானைகளும் பயந்து நாலாபக்கமும் சிதறின. அந்தச் சமயத்தில் நான் ஒரே பாய்ச்சலாகக் காட்டுக்குள் ஓடிவிட்டேன்.

என் அம்மா வருவாள் என்று வெகு நேரம் வரை காத்திருந்தேன். அவள் வரவே காணோம். என்னைக் காப்பாற்றுவதற்காக அவள் தன் உயிரைப் பறிக் கொடுத்துவிட்டாள் என்றே தோன்றுகிறது. நான் மிகவும் ஏங்கினேன். இப்பொழுது என் ஏக்கம் ஒருவாறு மட்டுப்பட்டு விட்டது. இனிமேல் நம்முடைய முயற்சியால் தான் பிழைக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். அப்படியே நடந்தும் வருகிறேன். நான் புலிக் குட்டி அல்லவா?



மீன் விளையாட்டு

பி. என். குமார்

இது வீட்டினுள் ஆடுவதற்கேற்ற சுவாரஸ்யமான ஆட்டம். இதை இரண்டு பேருக்குமேல் எத்தனை பேர் வேண்டுமானாலும் ஆடலாம். ஆனால் அத்தனைக்கு அத்தனை பொருள்கள் தேவையாக இருக்கும்.

ஒரு மெல்லிய அட்டையை எடுத்துக்கொண்டு அதில் ஒரு மீனின் முகத்தைப் படத்தில் காட்டியபடி காம்புடன் வரைந்து அதை அட்டையிலிருந்து தனியே கத்தரிக்கோலால் பெயர்த்து விடுங்கள். பின்பு அதன் வாயில் ஒரு துவாரமிட்டு விடுங்கள். அதன் பிறகு ஒரு கார்க்கை எடுத்து மீன் முகத்தின் அடியிலுள்ள காம்பின் அகலத்திற்குச் சிறிது ஆழமாகத் துவாரமிட்டுக் காம்பை அதில் செருகி மீன் முகத்தைக் கார்க்கோடு இணைத்துவிடுங்கள். இதுதான் மீன்.

சிறிது நீளமான ஒரு தடிக்குச்சியை எடுத்து அதன் ஒரு மூலையில் ஒரு கம்பியின் ஒரு முனையை இணைத்துவைக்க வேண்டும். வேண்டுமானால், அந்தக் குச்சியில் வர்ணக் காகிதங்களைச் சுற்றி அழகு படுத்தலாம்.

தூண்டிலும் தயாராகிவிட்டது. இனி, வேண்டியது எவ்வளவு பேர் ஆடுகிறீர்களோ அவ்வளவு வாளிகள். அதில் முக்கால் பாகம் நீர் இருக்கவேண்டும்.

ஒவ்வோர் ஆளுக்கும், இரண்டு மீன்கள், ஒரு தூண்டில், ஒரு வாளியில் முக்கால் பாகம் நீர் இவைதான் வேண்டியவை.

ஒவ்வொருவனும் தன்னிடமுள்ள இரு மீன்களையும் நீரில் மிதக்க விட்டுவிடவேண்டும்.

உங்களில் ஒருவனைத் தலைவனாக்கிக் கொள்ளுங்கள். அவன் தயார் என்றவுடன் ஆடுபவர்கள் தன்னிடமுள்ள தூண்டிலின் வளைந்த முனையால் மீனின் வாயிலுள்ள துவாரத்தினுள் அதை விட்டு மீனை வெளியே எடுத்துப் போடவேண்டும். இதேபோல் மற்ற மீனையும் வெளியே எடுக்கவேண்டும். யார் முதலில் இரண்டு மீன்களையும் வெளியே சேர்க்கிறார்களோ அவனே முதலாவதாக ஜயித்தவன். ஆடிப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்.

நாமொன்று நினைக்க

"ராஜா"



எப்படியாவது அந்தப் படத்தை அன்று பார்த்து விட வேண்டும் என்று துடியாய்த் துடித்தான் கிட்டு. தென்னிந்தியா முழுவதும் வெற்றிகரமாகச் சேர்ந்தாற்போல் நாற்பது வாரங்கள் ஓடிய, "வாழ்வா, தாழ்வா?" என்ற படத்தை அவன் இத்தனை நாட்களாகப் பார்க்கவே இல்லை. தவிரவும் அந்தப் படம் அன்றோடு கடைசி. அதிருஷ்ட வசமாக, அன்று சனிக்கிழமை ஆனதால் மாட்னிக் காட்சி இருந்தது. கிட்டுவின் நண்பன் சோமுவோ தனக்கு மட்டும் பணம் எப்படியாவது 'மேக் அப்' பண்ணிக்கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டான். ஆகவே கிட்டுவுக்கு?....

ஃ ஃ ஃ

"அம்மா! இன்னிக்கு மத்தியானம் எங்க பள்ளிக்கூடத்திலே ஒரு நாடகம் நடக்கப் போகிறது... எட்டணவாம் டிக்கட்டு.." என்றான் கிட்டு.

"அதெல்லாம் இன்னிக்கு மத்தியானம் எங்கேயும் தொலைஞ்சு போயிடாதே! அப்பா உன்னை இன்னிக்கு வீட்டிலேயே இருக்கச் சொல்லிருக்கா..."

"அதுக்காக இல்லேம்மா! நான் இன்னிக்கு அவசியம் எப்படியாவது போயாகணும். பள்ளிக்கூட நாடகத்துக்குப் போகாட்டா..."

"நான் சொல்றதைக் கேளுடா. இன்னிக்கு அப்பா உன்னை இங்கேயே இருக்கச் சொல்லிருக்கா... இன்னும் அரை மணி நேரத்திலே அப்பாவே இங்கே வந்துடுவா..."

"ஆமா.. ஆமா.. போன சனிக்கிழமை அப்படித்தான் இருக்கச் சொல்லிட்டுக் கடைசியிலே பஜனை மடத்துக்கு அழைச்சுண்டு போயிட்டா.. சாயந்தரம் விளையாடக் கூட முடியல்லே.." என்று கிட்டு முணு முணுத்தான்.

"சரி ஏதோ! நான் சொல்லறதைச் சொல்லிட்டேன்.. இனிமே உன்னிஷ்டம்.."

"எட்டணு?"

"அஞ்சறைப் பொட்டியிலே.. பன்னிரெண்டேகாலணு வச்சிருக்

கேன்...எட்டு அணா எடுத்துண்டு போ..பாக்கியை அதிலேயே வச்சுடு!"

"சரி அம்மா!"

ஃ ஃ ஃ

எட்டணாவை எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாகக் கிட்டு தன் நண்பன் சோமுவின் வீட்டுக்குச் சென்றான். அங்கே அப்போதுதான் கிட்டு தன் வீட்டில் நடித்த நாடகத்தைச் சோமு அவனுடைய தாத்தாவிடம் நடித்துக்கொண் டிருந்தான்.

"இதோ பாரு, தாத்தா! என்னோட 'கிளாஸ் பையன்' கிட்டுவே வந்திருக்கான்...நான் பொய் சொல்றேன்னா, அவனையே வேணும்னாலும்கேட்டுக்கோயேன்" என்று சோமு சொல்லி முடிப்பதற்குள்ளேயே கிட்டு தன்னுடைய வசனத்தை ஆரம்பித்தான்.

"ஆமாம் தாத்தா. எங்க ஸ்கூல்லே நாடகம் போடறா.. எட்டணாத்தான் டிக்கட்டு..."

"சரிடா பசங்களா!...எட்டுக் கணக்குத் தரேன். போட்டுட்டுப் போங்கோ!"

"இல்லே தாத்தா!...இப்பவே மணி இரண்டாயிடுத்து..இன்னும் கொஞ்சநேரத்திலே...."

"சரி...சரி..என்ன இருந்தாலும் கணக்குப் போட்டாத்தான் காசு!"

"சரி தாத்தா" என்று ஒப்புக் கொண்டான் சோமு வேண்டா வெறுப்பாக.

'எதடாது நான் மாத்திரம் போயிருந்தால்கூட சீக்கிரம் போயிருக்கலாமே! இப்போ கணக்கு வேறென்னா போட வேண்டியிருக்கு. கணக்குப்போடாமல் ஓடிப் போயிட்டா அப்புறம் தாத்தா நம்ம அப்பா கிட்டே ஒண்ணு கிடக்க ஒண்ணு..' என்று சிந்தனைச் சுழலில் ஆழ்ந்தான் கிட்டு.

"சரி சரி, சீக்கிரம் வா, சோமு. இப்பவே மணி மூணாயிடுத்து. உங்க தாத்தா கிட்டேருந்து எட்டணா வாங்கறதன்னா..!"

"நீ நடையை வேகமாப் போடுடா, கிட்டு. மூன்றரை மணிக்கு ஆட்டம். 'க்யூ'லே வேறே போய் நிக்கணும். பணத்தைக் கையிலேயா வச்சுண்டு இருக்கே? எங்கிட்ட கொடு. நான் என் பணத்தோட பர்ஸில் வச்சுக்கிறேன்."

ஃ ஃ ஃ

"அடாடா, க்யூ இவ்வளவ நீளமா இருக்கே!"

"தரை டிக்கட்டோல்லியோ?"

"அதையும் தவிர, கடைசி நாளோன்னோ?"

"கொஞ்ச நேரம் முன்னாடியே வந்திருந்தா!..."

"இப்ப என்னடா குடி முழுகிப் போச்சு!"

"என்ன? முன்னாடியிருக்கிறவாள்ளாம் இப்படிக் கலைஞ்சு போறாளே!"

"அதோ பாருடா, போர்டு போட்டுட்டான் 'ஹவுஸ் புல்'னு!"

"எல்லாம் உன்னாலேயும் உன் தாத்தாவாலேயும் தான்டா!" என்று சீறினான் கிட்டு.

"இப்போ என்னடா மோசம்! ஒரு ஹோட்டல்லே புகுந்து மஜாவா—" என்று சொல்லிக் கொண்டே தன் பர்ஸ் இருக்கும் டிராயர் பாக்கெட்டைத் தட்டும்போது, பையில் அவன் போட்டிருந்த கோலிக் குண்டுகள் தான் இருந்தன.

"பர்ஸ் எங்கேயோ காணும்டா!" என்று குதித்தான் சோமு.

"என் பணத்தையும்னா அதிலே வச்சிருந்தே! உன்னோட இன்னிக்கு வந்ததிலே எனக்கு எல்லாம் நஷ்டம்தான்!" என்று எழும்பிக் குதித்தான் கிட்டு.

அவன் எழும்பிக் குதித்தபோது இரண்டரை ரூபாய் ஸோபா கேட்டுக்குள் இருவர் நுழைவதைப் பார்த்தான். உடனே தலையைக் குனிந்துகொண்டே தியேட்டரை விட்டு, சோமுவைக்கூடக் கவனியாமல் நழுவினான்.

ஸோபா கேட்டுக்குள் நுழைந்தவர்கள் யார் தெரியுமா? கிட்டுவினுடைய அப்பாவும் அம்மாவும் தான்!

வாத்தியார்: இதென்னடா, நீ எழுதியிருக்கிறதுக்குக் கீழே ஒரே கமாவும் புல்ஸ்டாப்புமாகப் போட்டிருக்கே?

மணி: அது வந்து, ஸார், அதெல்லாம் எங்கே போடறதுன்னு தெரியல்லே, ஸார். எங்கே போடணுமோ அங்கே போட்டுத் திருத்திடுங்கோ, ஸார்!

—ரஸாக்

211285
600 008

கேட்டீர்களா!

குடியரசு தினம்

இந்தியா குடியரசு நாடாகி மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன. ஜனவரி மாதம் 26-ஆம் தேதியன்று நான்காவது குடியரசு தினம் நாடெங்கும் குதூகலமாகக் கொண்டாடப்பட்டது. முதல் குடியரசு நாள் அன்றுதான் கண்ணனும் பிறந்தான் என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கும். கண்ணனுக்கும் மூன்று ஆண்டுகள் நிரம்பி, நாலாவது ஆண்டு தொடங்கியிருக்கிறது உலகில் இந்தியக் குடியரசு பெருமைப் படத்தக்க ஸ்தானம் வகிப்பதுபோல் கண்ணனும் சிறுவர் பத்திரிகை உலகில் பெருமைப் படத்தக்க ஒரு நிலையை வகிக்கிறன்.

ஆந்திர ராஜ்யம்

சென்னை ராஜ்யத்தில் ஆந்திர நாடும் சேர்ந்துள்ளது. இப்பொழுது அதைத் தனி ராஜ்யமாக அமைக்க இந்திய சர்க்கார் முயன்று வருகிறார்கள். நீதிபதி வாஞ்சு இந்தப் பிரிவினையைப் பற்றி முடிவு செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறார். கூடிய சீக்கிரம் தனி ஆந்திர ராஜ்யம் அமைக்கப்பட்டு விடும்.

மே. இ. தீவுகள் - கிரிக்கெட் மாட்சு

மேற்கு இந்தியத் தீவுகளில் நடைபெறும் கிரிக்கெட் மாட்சின் முதல் ஆட்டம் நடைபெற்றது. முதல் இன்னிங்ஸில் இந்தியாக் கோஷ்டி 417 ரன்கள் எடுத்து, ஆல் அவுட்டாகியது. மே. இ. தீவுகளின் கோஷ்டி 438 ரன்கள் எடுத்திருக்கிறது. இந்தியக் கோஷ்டியைச் சேர்ந்த உம்ரிகர் 130 ரன்கள் எடுத்து நம் கோஷ்டிக்குப் பெருமையைத் தேடித் தந்தார். மே. இ. தீவைச் சேர்ந்த வீக்ஸ் 207 ரன்கள் எடுத்து நம்முடைய பாராட்டுதலைப் பெற்றார். முதல் ஆட்டம் டிராவாகியது.

ஜான்ஸி-கி-ராணி

நாட்டின் சுதந்தரத்துக்காகப் போராடிய வீர மங்கையர் பலர் இருந்திருக்கிறார்கள். அவர்களில் தலைசிறந்து விளங்கிய அரசி ஜான்ஸிராணி. பலம் பொருந்திய பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடி, சுதந்தரத்துக்காக உயிரையும் நீத்த அந்த வீர அரசியின் சரித்திரத்தை இயற்கை வர்ணப் படமாக எடுத்திருக்கிறார் ஸோரப் மோடி என்பவர். நாம் பெருமைப் படக்கூடிய இந்தப் படத்தின் ஆரம்ப விழாவில் நேருஜியும் கலந்துகொண்டார்.

சுலப ஹிந்தி போதினி

நீங்கள் ஹிந்தி கற்றுக்கொள்ள வேண்டுமானால் ஒரு நல்ல புத்தகம் இருக்கிறது. ஹிந்தியைச் சுலபமாக கற்றுக்கொள்ளலாம். இதை ரா. வீழிநாதன் எழுதியிருக்கிறார். கற்றுக்கொண்டவர்கள் பிறருக்குச் சுலபமாகக் கற்றுத்தர இது பயன்படும். ஒரு ரூபாய் விலையுள்ள இந்தப் புத்தகம் ராகாபிரகாஷன், தியாகராயநகர் என்ற விலாசத்தில் கிடைக்கும்.

கண்ணன் தபால்

உங்கள் சந்தேகங்கள்

கி. நாராயணன், சந்தைப்பேட்டை, புதுக்கோட்டை.

உலகிலேயே மிகமிக நீளமான நதி எது? அது எங்கே இருக்கிறது? அதன் நீளம் என்ன?

வட அமெரிக்காவிலுள்ள மிஸௌரி-மிஸிஸிப்பி என்ற நதிதான் உலகிலேயே அதிக நீளமுள்ள நதி. இவை இரண்டும் தனித்தனி நதியாக இருந்தாலும் பாதிக்குமேல் இரண்டும் ஒன்று சேர்ந்து வந்து மெக்ஸிகோ வளைகுடாவில் கலக்கிறது. இதன் மொத்த நீளம் 4,221 மைல்.

எஸ். சந்தானம், தண்டையார்பேட்டை.

கடலிலேயே கலக்காத நதிகள் இருக்கின்றனவா?

இருக்கின்றன. அவற்றில் முக்கியமான பெரிய நதி மத்திய ஆசியாவிலுள்ள பீடபூமியில் இருக்கிறது. 350,000 சதுர மைல்களுக்கு அந்த நதி பாய்கிறது. குன்லுன், தீன்ஷன் என்ற மலைகளுக்கு இடையே தான் இந்தப் பீடபூமி பரந்து கிடக்கிறது. இந்த நதியின் பெயர் டாரீம் என்பது. பல கிளைகளாகப் பிரிந்து, சிறு சிறு ஏரிகளாகத் தேங்கி, மணல் வெளியில் மறைந்துவிடுகிறது. பரந்த மணல் பரப்பு அதன் நீரை உறிஞ்சிவிடுகிறது.

த. கு. இலக்குமணன், தளவாளப்பட்டு, வெட்டணை.

இந்தியாவை மிகத் திறமையாக ஆண்ட பெண் அரசி யார்?

நூர்ஜஹான்.

சலவைக் கல்லால் கட்டப்பட்ட பிரசித்தமான கட்டடம் எது? யாரால் கட்டப்பட்டது?

ஆக்ராவிலுள்ள டாஜ் மஹல் என்ற கட்டடம் சலவைக் கல்லால் கட்டப்பட்டது. உலக அதிசயங்களில் ஒன்று இந்தக் கட்டடம். இதைத் தன் மனைவி மும்தாஜின் ஞாபகார்த்தமாக மொகலாய சக்கரவர்த்தி ஷாஜஹான் கட்டினார்.

எஸ். வி. சக்திவேல், தென்புத்தூர்.

வால் நட்சத்திரங்களில் பிரசித்தமானது எது? அது எத்தனை வருஷங்களுக்கு ஒரு முறை நமக்குத் தென்படுகிறது?

ஹாலீ காமெட் என்பது பிரசித்தமான வால் நட்சத்திரம். இது சுமார் எழுபத்தைந்து வருஷங்களுக்கு ஒரு முறை நமக்குத் தென்படுகிறது.

வி. வெங்கடரமணன், மதுரை.

என் உடம்பில் தேமல் வந்திருக்கிறது. அதைப் போக்க என்ன செய்ய வேண்டும்?

தேங்காய் எண்ணெயை லேசாகத் தடவி அதிகாலையில், நல்ல சுத்தமான தண்ணீரில் அழுக்குத் தேய்த்து ஸ்நானம் செய்து வந்தால் மறைந்துவிடும்.

கே. சந்திரசேகரன், பிராட்வே, சென்னை.

பணம் என்றால் என்ன?

சுருக்கமாகச் சொன்னால் பணம் ஓர் அழகான பொருள். அதைச் சாப்பிடவோ, உடுத்துக்கொள்ளவோ முடியாது. ஆனால் அதை ஒவ்வொருவரும் விரும்புகிறார்கள். காரணம் அது உழைப்புக்கோ, பொருளுக்கோ ரசீதுபோல இருப்பதுதான்.

காப்பி குடித்திட வாரீர்!

('தாயின் மணிக்கொடி பாரீர்' மெட்டு)

காப்பி குடித்திட வாரீர்!—இதைக்
கண்டு புகழ்ந்து பருகிட வாரீர்! (காப்பி)

1. தூங்கி வழிந்திடும் எவர்க்கும்—இது
நீங்கிடச் செய்யுமாம் நித்திரை மயக்கம்
தாங்கிடும் சக்தி அளித்திடும் பானம்—இதே
தரணிதனில் புகழ் பெற்று விளங்கிடும் (காப்பி)

2. கடைகளெங்கும் விற்றல் காணீர்—இதே
களிப்பினை ஈந்து களைப்பினை நீக்கும்
மடைதிறந்த வெள்ளம் போன்ற மக்கள்
மகிழ்ந்து மிகவும் விருப்புடன் பருகிடும் (காப்பி)

3. சேர்ந்ததைப் பருகுதல் காணீர்—எவரும்
சோர்ந்திடும் வேளையில் சுகமளிக்கும்
தேர்ந்தவர் போற்றும் தெய்விக பானம்
தேவர்களும் மிக விருப்புடன் பருகிடும் (காப்பி)

4. கானகத்துள்ளோரும் விரும்பும்—இதை
வானவர் தானவர் யாவரும் வாழ்த்தும்
மாணவர்க்கும் உபகாரம் செய்தே—
மாண்புடன் விளங்கி மாட்சிமை பெற்றிடும் (காப்பி)

—மணிமேகலாதேவி

விடுகதை

வெள்ளி மலையில் விதையூன்றி
விராலி மலையில் கொடி படர்ந்து
தஞ்சாவூரில் பிஞ்சு விட்டு,
தலைவாசலில் காய் பறித்தேன்.

K. J. V., விடுகதைப் புதையல்.

விடை: [illegible]

உனக்குத் தெரியுமா?

கரும்பில் உண்டு; சர்க்கரையில் இல்லை
அண்ணனிடம் உண்டு; தம்பியிடம் இல்லை
கிண்ணத்தில் உண்டு; குடத்தில் இல்லை
என்னிடமும் உண்டு; உன்னிடமும் உண்டு
கமலாவிடம் உண்டு; விமலாவிடம் இல்லை
பழத்தில் உண்டு; காயில் இல்லை
முகத்தில் உண்டு; மூக்கில் இல்லை
கம்பியில் உண்டு; ஊசியில் இல்லை

விடை: [illegible]

எஸ். ஐயர் (J.6), மயிலாப்பூர்

அட்டைப் பெட்டி



ஒரு சதுரமான அட்டையை எடுத்துக்கொள்ளுங்கள். அதை எட்டுச் சமபாகங்களாகக் கோடிட்டுக்கொள்ளுங்கள். பிறகு படத்தில் குறிப்பிட்டபடி வெட்டி மடக்கி ஒட்டிவிட்டால் அருகில் உள்ளது போன்ற பெட்டியாகிவிடும்.

கிளைக் கழகக் கூட்டங்கள்

திருச்சி கண்ணன் கிளைக் கழகத் தேர்தல் ஜனவரி 14-ஆம் தேதி நடைபெற்றது. உபதலைவராக A. ஜான் தேவதாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். செயலாளர், பொருளாளர், மற்றும் நிர்வாக அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

* * *

கல்கத்தா கண்ணன் (பெண்கள்) கிளைக் கழகத்தின் மூன்றாவது கூட்டம் ஜனவரி 5-ஆம் தேதி ஸ்ரீமதி ஹா. கி. வாலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

—ரா. லக்ஷ்மி (L. 35)

* * *

மதுரை கிளைக் கழகத்தின் சார்பாக சென்ற ஆண்டுக் கடைசியில் ஸ்ரீ வி. ஜி. ஸ்ரீநிவாஸன் அவர்கள் தலைமையில் ஆண்டு விழா நடைபெற்றது.

* * *

யானை

ஒரே கோட்டில் வரைந்த படம்

டி. வி. ஆர்., ஆரணி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

புதிய கண்ணன் வெளியீடுகள்

ஜக்கு

'பட்டணம் போகப்போகிறேன்' என்று நண்பர்களிடம் பெருமையடித்துக் கொள்கிறுன் ஜக்கு. எஞ்சின் டிரைவரின் உதவியால் ஒரு நாள் பட்டணத்துக்கே போய்விடுகிறுன். ஹார்பர் போகிறுன்; ஏரோட்ரோம் போகிறுன்; ஸ்விம்மிங் பூல் போகிறுன்; டிராமா போடுகிறுன்! எங்கே பார்த்தாலும், 'ஜக்கு ஜக்கு' என்று அவனைப் பற்றியே பேச்சு! ஆனல் அவனை யாரோ தினம் டெலிபோனில் கூப்பிட்டு மிரட்டுகிறுர்கள். அந்த டெலிபோன் ஆள் யாரென்று கண்டுபிடிக்கவே முடியவில்லை. படிக்கும்போது நமக்கும் அந்த ஆள் யாரென்று திடுதிடுப்பாகவே இருக்கிறது. எப்படியோ ஜக்கு சமாளித்துக் கண்டுபிடிக்கிறுன்—சுவாரஸ்யமான சம்பவங்கள். விறுவிறுப்பான சம்பாஷணைகள். படிக்கத் தொடங்கினல் கீழே வைக்க மனம் வராது. அழகான படங்கள்; நல்ல காகிதம்.

'ஆர்வி' எழுதியது. **விலை 8 அணு**

★

குளிகைத் தீவு

அருமையான சித்திரக் கதை. இளவரசன் நாகநந்தன் குளிகைத் தீவுக்குச் செல்கிறுன். பல தீரச் செயல்களும் துணிகரமான சாகஸச் செயல்களும் செய்கிறுன். மந்திரவாதியின் ஜாலங்கள் பயன்படவில்லை. ஆகாய விமானத்தையும் தோற்கடிக்கும் சூரக் கழுகு இருந்தும் அவனை ஆபத்துக்கள் சூழ்ந்துகொள்கின்றன. மந்திரத் தீவின் இளவரசி அவனைப் பெண்ணுகவே மாற்றிவிடுகிறுள். எல்லா இன்னல்களையும் கடந்து நாகநந்தன் வெற்றிமாலை சூடித் திரும்புகிறுன்.

திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த கதை. கண்ணைக் கவரும் அழகான சித்திரங்கள்.

கதை - 'ஆர்வி'; சித்திரம்: சங்கர். **விலை 4 அணு**

புத்தக வியாபாரிகளுக்கும் கண்ணன் அங்கத்தினர்களுக்கும் கமிஷன் உண்டு. எல்லா ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

விவரங்களுக்கு:

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

Reg. No. M. 5542

ஹலோ!

நான்தான் **அசட்டுப் பிச்சு** பேசுகிறேன்! தெரியவில்லையா என்னை?

அடுத்த இதழ் கண்ணனைப் பாருங்கள்!

என்னைப்பற்றி ஒரு தொடர்கதையே ஆரம்பமாகிறது, ஸார்!

சாமான் எதுவும் கெட்டுப் போய்விட்டதா? எதாவது திருட்டு நடந்துவிட்டதா? என்ன ஸார், விழிக்கிறீர்கள்? நான் ஒரு பெரிய துப்பறியும் நிபுணன், ஸார்! பெயர் இப்படி இருக்கிறதே என்று சிரிக்கிறீர்கள், இல்லையா? வாருங்கள். அடுத்த இதழிலிருந்து உங்களைக் குடல் குலுங்கும்படி சிரிக்க வைத்து, மூச்சுத் திணறும்படி பிரமிக்க வைத்து-என்ன ஆச்சோ என்று கதிகலங்க வைத்து - உங்களை என்னவெல்லாம் செய்கிறேன், பாருங்கள்!

எங்கே ஓட்டமாய் ஓடுகிறீர்கள்? கண்ணன் பிரதிக்கு ஏஜெண்டிடம் சொல்லி வைக்கவா? பேஷ், பேஷ்! உடனே செய்யுங்கள், அப்புறம் என்மேல் வருத்தப்படாதீர்கள்!

அசட்டுப் பிச்சு

ஆர்வி எழுதும் புதிய தொடர்கதை
கண்ணன் மார்ச் இதழில் ஆரம்பமாகிறது.

தனிப் பிரதி 4 அணா **வருஷ சந்தா ரூபாய் 3**